கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்
யாழ்ப்பாணம்.

மக்களின் குரல்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M.
FERNANDO
580, HOSPITAL ROAD
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 21 ஞாயிற்றுக்கிழமை (04 - 06 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 189

# பிரபா, பொட்டம்மானை நாடுகடத்த இந்தியா உத்தியோகபூர்வ கோரிக்கை

## நேற்று இலங்கையிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக அறிவிப்பு

புதுடில்லி, ஜூன் 4

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுண்ட சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன், உளவுப் பிரிவுத் தலைவர் திரு. பொட்டு அம்மான், மகளிர் பிரிவுத்தலைவி அகிலா ஆகியோரை இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு நாடு கடத்துமாறு இலங்கை அரசை இந்தியா நேற்று உத்தியோக பூர்வமாகக் கேட்டுக் கொண்டது.

இந்திய அரசின் விசேட பிரதிநிதிகள் நேற்று கொழும்புக்குச் சென்று, அங்கு இலங்கை வெளியுறவு அமைச்சகத்திடம் இது தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்ததாக —

இந்திய வர்த்தக அமைச்சரும், ராஜீவ் கொலை விசாரணை பற்றிய விவகாரங்களைக் கையாள்வதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட அமைச்சருமான பழனியப்பன் சிதம்பரம் இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

திரு. பிரபாகரனை ஒப்படைக்கும்படி இந்தியா உத்தியோக பூர்வமாகக் கோரியுள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி



...அப்ப மழை வராட்டில் மற்றொரு ஜூலை கலவரம் தான் எண்டு சொல்லுங்கோ..

# இராணுவ ரீதியாக இந்தியா தலையிடுவதற்கு வழிவகுக்கும்

## அரசியல் அவதானிகள் கருத்து

கொழும்பு, ஜூன் 4

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை ஒப்படைக்கும்படி இந்தியா இப்பொழுது இலங்கையிடம் உத்தியோக பூர்வமாகக் கோரியிருப்பது, இலங்கைப் பிரச்சினையில் இந்தியா இராணுவ ரீதியில் தலையிடுவதற்கு வழி வகுப்பதாகக் கருதப்படுகின்றது.

— ஏ. எவ். பி. செய்தி நிறுவனத்தின் கொழும்புச் செய்தியாளர் அமால் ஜெயசிங்க இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார். அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி சந்திரிகா இந்தியா சென்றிருந்த போது அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது மேற்படி கோரிக்கையை இந்தியா விடுத்திருந்தால் அது அந்தப் பேச்சுக்களுக்கு தடையாக வந்திருக்கும்.

தற்போது நிலைமை முற்றாக மாறியுள்ள நிலையில் இத்தகைய கோரிக்கையை இந்தியா வெளியிட்டிருப்பது இப்பிரச்சினையில் இராணுவ [யுத்த] ரீதியாக இந்தியாவைத் தலையிட வழிவகுப்பதாகக் கருதப்படுகின்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியிலும் ஆயுதங்கள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 4

கடந்த வியாழன்று பூநகரியில் நடத்திய தாக்குதலில் படையினரிடம் இருந்து ஆயுதங்கள் பலவற்றை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலியானார் - என்பது தெரிந்ததே.

★ ரி-56 2 ரக துப்பாக்கி — 01

(6 ஆம் பக்கம் பார்க்க)

# காலி நகரில் இனவன்செயல்கள்

# தமிழரின் 22 கடைகள் எரிப்பு!

## தெற்கில் நேற்று பலத்த மழை

கொழும்பு, ஜூன் 4

மேல் மாகாணம், வடமேல் மாகாணம் மற்றும் தென் மாகாணத்தில் மாத்தறை, காலி ஆகிய இடங்களில் நேற்று பலத்த மழை பெய்த தாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என்றும் கொழும்பில் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்றும் அறிவிக்கப் பட்டது.

[ஒ-5]

## திரியாய் காட்டு பகுதியில் மேலும் 5 படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 4

விடுதலைப் புலிகளைத் தேடி அழிப்பதற்காக நேற்று முன்தினம் காலை திரியாய் காட்டுப் பகுதிக்குள் நுழைந்த இராணுவ அணி மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஐந்துக்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்தனர். 12 பேர் வரை படுகாயமடைந்தனர்.

காலை 7 மணிமுதல் மாலை 6 மணிவரை மோதல் நீடித்தது.

காட்டுப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் படையினர் தரப்பில் நால்வர் கொல்லப்பட்டனர் என்றும் 12 பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

(ஜ-4-5)

## 12 வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 4

திரியாய் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் காலை தேடி அழிக்க முற்பட்ட இராணுவ அணியினருடன் நீண்ட நேரம் இடம் பெற்ற சமரில் 12 வேங்கைகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த வேங்கைகளின் பெயர் விவரங்கள் வருமாறு:

★ கப்டன் கமல் (பாலசுப்பிரமணியம் சிவ குமார். வவுனியா)

★ கப்டன் சிவன் (ஏகாவரம் திவாகரன் — மாங்குளம்)

★ லெப்டினன்ட் மனோகரன் (குழந்தைவேல் பத்மநாதன் — மட்டக்களப்பு)

★ லெப்டினன்ட் இளையவன் (காசி இராசலிங்கம் ஞானலிங்கம் — யாழ்ப்பாணம்)

★ 2 ஆம் லெப்டினன்ட் புலேந்திரன் (குலசேகரம் பிள்ளை சிவசேகரன் — கிளிநொச்சி)

★ 2 ஆம் லெப்டினன்ட் தேவன் (சிவானந்தன் இந்திரன் — யாழ்ப்பாணம்)

★ 2 ஆம் லெப்டினன்ட் குபேரன் (கணேசமூர்த்தி குமாரலிங்கம் - திருமலை)

★ வீரவேங்கை நீலகண்டன் (கந்தசாமி அமுதன் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் தாக்குதலில் ஆயுதங்களும் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 4

மன்னாரில் நேற்று முன்தினம் நான்கு படையினர் கொல்லப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் படையினரிடமிருந்து புலிகள் பல ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள மன்னார் நகரில் இருந்து 300 யார் தொலைவில் உள்ள காவலரணுக்கு ''லாண்ட் மாஸ்ரர்'' மூலம் உணவுப் பொருள்களைக் கொடுத்துவிட்டு திரும்பிய படையினர் மீதே புலிகள் அதிவேக அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

கடந்த மாதம் 14 ஆம் திகதி இராணுவத் தாக்குதலில் வீரச்சாவடைந்த மேஜர் காளி, கப்டன் பூங்காவனம் ஆகியோரின் நினைவாக நடத்தப்பட்ட இத்தாக்குதலில்

★ ரி 56 - 2 ரக துப்பாக்கி — 03

★ ரி 56 மகஸீன் — 03

★ ரவைகள் — 90

ஆகிய ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர். [ஜ]

## பொலீஸ் காவலரண் மீது காத்தான்குடியில் தாக்கு!

### ஒருவர் பலி, ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

மட்டக்களப்பு காத்தான்குடி பகுதியில் கடந்த வியாழன்று இரவு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பொலீஸார் ஒருவர் கொல்லப்பட்டார்.

பொலீஸ் காவலரண் ஒன்றின் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டது. காவலரணில் இருந்த ஏனைய பொலீஸார் தப்பி ஓடிவிட்டனர்.

★ ரி-56-1-ரக துப்பாக்கி —01

★ ரி-56 மகஸீன் — 04

★ ரவை — 250

★ மகஸீன்ஹோல்ஸர் —01

ஆகிய ஆயுதங்களை பொலீஸாரிடம் இருந்து புலிகள் கைப்பற்றினர். (ஜ-4)

## காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு

கொழும்பு, ஜூன் 4

தென்னிலங்கையில் காலிப்பகுதியில் தமிழர்களுக்கு எதிரான இனவன்செயல்கள் வெடித்தன; சிங்களக் குண்டர்கள் குழு ஒன்று நகருக்குள் புகுந்து தமிழர்களின் 22 கடைகளை சூறையாடிய பின் தீவைத்து எரித்து நாசமாக்கியது.

நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக காலி நகரிலும் அதைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

பொலன்னறுவைப் பகுதியில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட திம்புலாகல ஸ்ரீ சிலாலங்கார தேரரின் சொந்த இடம் தென் இலங்கையின் மாத்தறை மாவட்டம் கித்தலகம பகுதியாகும்.

அவரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெறவிருக்கையில் தென்னிலங்கை நகரமான காலியில் நேற்று முன்தினம் மாலையில் இனவன்செயல்கள் வெடித்திருக்கின்றன.

நேற்று முன்தினம் மாலையிலேயே சுமார் ஆயிரம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மற்றொரு ஜூலைக் கலவரத்தை ஏற்படுத்த எதிர்க்கட்சியினர் முயற்சி

## காலி சம்பவம் குறித்து ஜனாதிபதி அறிக்கை

கொழும்பு, ஜூன் 4

தென் பகுதியில் மக்களைத் தூண்டி விட்டு நாட்டில் பதற்றத்தை உருவாக்கி மற்றொரு ஜூலைக் கலவர நிலைமையை ஏற்படுத்த சதிகாரர்கள் முயற்சி செய்து வருகின்றனர்.

— ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காலி மாவட்டத்தில் நடந்த வன் செயல் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

இனக் கலவரங்களை உருவாக்குவதன் மூலம் குறுகிய அரசியல் லாபம் தேடும் நோக்கத்துடன் எதிரணியில் உள்ள ஒரு முக்கிய கட்சியே காலி சம்பவத்தை திட்டமிட்டு நடத்தியது என்பது தெளிவாகத் தெரிய வந்துள்ளதாக அவர் அந்த அறிக்கையில் குற்றம் சாட்டினார்.

இனக் குரோதத்தைத் தூண்டும் விதமான கருத்துக்களை சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்திரிகைகள் மூலம் வெளியிட்டிருந்ததாகவும் ஜனாதிபதி குற்றம் சுமத்தினார்.

பொலீஸாரின் உதவியோடு நிலைமையை அரசு ஒரு மணி நேரத்துக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தது.

இந்த சம்பவத்துக்குப் பின்னணியில் இருந்த சக்திகள் அல்லது தனிநபர்கள் பற்றிய தகவலை பொதுமக்கள் பொலீஸாருக்கோ அல்லது அரச நாடாளுமன்ற உறுப்பினருக்கோ வழங்கவேண்டும்.

17 வருடகால இடைவெளிக்குப் பின்னர் நாட்டில் ஜனநாயக ரீதியான சமாதான சூழலை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி மேற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அறுநூறு தமிழர்கள் கொழும்பில் கைது!

கொழும்பு, ஜூன். 4

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சுமார் 600 தமிழர்கள் தலைநகர் கொழும்பில் கைது செய்யப்பட்டனர் என்றும் —

அவர்களில் 10 பேர் தவிர்ந்த ஏனையோர் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்றும் செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்று தெரிவித்தது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 பேரும் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்பதில் தமக்கு சந்தேகம் இல்லை என்று பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்தன.

# எல்லைக் கிராம பாதுகாப்புக்கு வெளிநாட்டு நிபுணர் ஆலோசனை

## 10 பேர் கொண்ட குழு கொழும்பு வருகை

கொழும்பு, ஜூன் 4

வடக்குக் கிழக்குமாகாணங்களில் எல்லைப்புறக் கிராமங்களின் பாதுகாப்பை வலுப்படுத்த பாதுகாப்புப் பிரிவுகளுக்கு ஆலோசனைகள் வழங்க வெளிநாடுகளைச் சேர்ந்த பத்து இராணுவ நிபுணர்கள் இலங்கை வந்திருப்பதாக ''லங்காதீப'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

எல்லைப்புறக் கிராமங்களின் பாதுகாப்பை வலுப்படுத்தும் திட்டம் வடமத்திய மாகாணத்திலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

அவை தொடர்பாக ஏற்கனவே அடிப்படை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்று அரச தரப்புப் [illegible] அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

எந்தெந்த நாடுகளிலிருந்து இந்த இராணுவ நிபுணர்கள் வந்துள்ளனர் என்ற விவரத்தை பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிட முடியாது என்றும் —

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு தனிப்பட்ட முறையில் உதவி செய்யும் [illegible] இந்த இராணுவ நிபுணர்கள் கொழும்பு வந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (ஜ-10)

# பலத்த பாதுகாப்புடன் தேரரின் இறுதிச்சடங்கு

கொழும்பு, ஜூன். 4

சுட்டுக்கொல்லப்பட்ட சிலாலங்கார தேரரின் இறுதிச் சடங்குகள் திம்புலாகலவில் நேற்றுமாலை நடைபெற்றன.

இறுதிச் சடங்குகளை ஒட்டி பொலனறுவை மாவட்டத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

பல இடங்களிலும் இருந்து வந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் நேற்று தேரருக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

பதற்றம் நிலவியதால் வன்செயல்களைத் தடுக்கும் நோக்கில் ஆயுதம் தாங்கிய சுமார் ஆயிரம் பொலீசார் திம்புலாகலவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

மேலதிகமாக எழுநூறு பேர் கொண்ட இராணுவ அணி ஒன்றும் அங்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

பெரும் எண்ணிக்கையான பிக்குமாரும், அரச பிரமுகர்களும் தேரரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்.

## காலி வன்செயல்களை கடும் மழையே தணித்தது!

கொழும்பு, ஜூன் 4

காலி நகரில் நேற்று முன்தினம் இரவு ஆரம்பித்த வன்செயல்கள் அப்பகுதியில் பின்னர் பெய்த கடும் மழை காரணமாகவே தணிந்தன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

ஆயிரக்கணக்கான சிங்கள குண்டர்கள் காலிநகரில் தமிழர்களுக்கு எதிரான பெரிய அளவிலான தாக்குதலுக்கு திட்டமிட்டிருந்தனர் என்றும் —

— குண்டர்களின் தீ வைப்புச் சம்பவங்களுக்கு கடும் மழை தடையாக அமைந்து விட்டதாகவும் செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

காலி, மாத்தறை பகுதிகள் உட்பட தென்பகுதியில் பல இடங்களிலும் நேற்று முன்தினம் இரவு முதல் பலத்த மழை பெய்து வருகிறது. (ஜ-6]

### இராணுவ உதவிகளை வழங்கி

# இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடக்கூடாது!

## தி.மு.க பொதுக்குழு தீர்மானம்

இலங்கை அரசுக்கு இராணுவ உதவிகளை வழங்குவது என்ற வகையில் இனப்பிரச்சினையில் இந்தியா தலையிடக் கூடாது.

நேற்று முன் தினம் சென்னையில் நடைபெற்ற தி மு க வின் பொதுக்குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது எழுந்துள்ள நிலையில் அமைதி அங்கு நிலவ ஏனைய நடுகளின் அரசுகள் அக்கறை காட்டவேண்டும். அங்கு பிரச்சினைகளைக் குறைப்பதற்கு உதவ வேண்டுமே தவிர கூட்டுவதற்கு அல்ல — என்றும் அத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

### உத்தரப் பிரதேச மாநிலத்தின்

# முதல்வராக மாயாவதி நேற்று சத்தியப் பிரமாணம்

புதுடில்லி, ஜூன் 4

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தின் முதலமைச்சராக பகுஜன் கட்சியின் சட்டசபைத் தலைவர் செல்வி மாயாவதி நேற்றிரவு ஆளுநர் மோதிலால் வோரா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

முன்னதாக ஆட்சியில் இருந்த சமாஜவாதி — பகுஜன் கட்சி கூட்டணி முறிவடைந்ததை அடுத்த—

முதலமைச்சரான சமாஜவாதிக் கட்சியைச் சேர்ந்த முலாயம் சிங்யாதவ்வை பதவி விலகுமாறு ஆளுநர் கோரியிருந்தார்.

ஆளுநரின் உத்தரவை ஏற்று முதலமைச்சர் முலாயம் சிங் யாதவ் பதவி விலக மறுத்ததை அடுத்து ஆளுநர் அவரை பதவியில் இருந்து ''டிஸ்மிஸ்'' செய்தார்

அதனைத் தொடர்ந்து ஆட்சி அமைக்குமாறு பகுஜன் கட்சிக்கு ஆளுநர் அழைப்பு விடுத்தார். (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலையில்-கிழங்கு; மதியம்-வரகரிசி; இரவு-குரக்கன்;

# வடதமிழீழத்தின் அன்றைய உணவுகள் இவையே!

அண்மையில் பி. பி. ஸி. ஒலிபரப்பியபழைய தகவல் ஒன்று மனதைக் கவரும் முறையில் அமைந்தது. தமிழீழ மக்களுக்காக ஒலி பரப்பப்பட்டது போன்று இருந்தது அந்த நிகழ்ச்சி.

இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில அதாவது இற்றைக்கு ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் பிரித்தானிய நாட்டுச் சின்னஞ் சிறிய குழந்தைகளுக்கு வாழைப்பழம் என்றால் என்னவென்று தெரியாத ஒரு சூழ்நிலை உருவாகியது. இன்றைய நாலு ஐந்து வயதுச் சிறுவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் புகைவண்டி என்றால்

இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு முகம் கொடுத்து அதைவென்று காட்டினர் என்பதை உணர்ந்துணரலாம்.

## எமது பண்டைய உணவு வகைகள்

துரியோதனனாதியோர்களுக்கும் பஞ்ச பாண்டவர்களுக்கும் இடையில் மகா பாரதப் போர் மூண்டது போல வடக்கும் கிழக்கும் இணைந்த அகண்ட தமிழ் மாநில மக்கள் விரும்பியோ விரும்பாமலோ அவர்களைச் சுற்றி யுத்தம் ஒன்று வந்து விட்டது.

இரண்டாவது உலக மகா யுத்த காலத்திலும் அதற்கு முன்னரும் ஈழத்துத் தமிழ்

கள், மரவள்ளி மா வகைகளையுமே மக்கள் பயன்படுத்தினர்.

அவர்கள் வாழ்நாள் முழுவதும் தேகாரோக்கியத்துடன் வாழ்ந்தனர்.

## ருசி மிகுந்த ஒடியற் கூழ்

பல்வேறு வகையான மரக்கறி வகைகளுடன் உழுந்து, பயறு

னையில் இருந்தன. பாணைப் பனங்கட்டியுடன் அருந்துவது அந்நாளைய பழக்கமே ஒழிய சீனியுடன் சேர்த்துப் பருகுவது பழக்கத்திலோ வழக்கத்திலோ இருந்திருக்க வில்லை.

## தமது உற்பத்திப் பொருள்களை உண்டனர் வடக்கிலோ கிழக்கிலோ

பதன் பொருள் அதுதான். இதனை எமது பாரம்பரிய மான அறுபது வருடங்களுக்கு முற்பட்ட வாழ்க்கை முறைகளில் இருந்து அறிகிறோம். போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு அடிபணியாது நின்ற கிராமங்கள் பல. எவரிடத்திலும் எதையும்

இன்று உணவுப் பொருள்களுக்கான தடையும் அமுல் நடத்தப்படுகின்றது.

## கோமாரிஇன்றேல்சாமாரி

இன்று கோமாரி கப்பல் மூலம் மா மாரி பொழியா விட்டால் சாமாரி பொழியும் நிலை என்றாகி விட்டதோ என்றே வினவத் தோன்றுகிறது.

எமது உள்ளூர்க் காய்கறிகள் இன்றெல்லாம் பல சந்தர்ப்பங்களில் கால்நடைகளுக்குத் தீவனமாகின்றன. ஆனால் இறக்குமதியாகும் உருளைக்கிழங்கின் விலை ஒரு கிலோ 120 ரூபாவாக விலை போகிறது. சுவையிலும், தரத்திலும் அதற்கு நிகரான அதாவது ஒத்ததான கொடிக்

வர்கள் பொதுமக்களே.

பாணுக்குப் பதிலாக எமது உள்ளூர் உணவுப் பொருள்களையும், பழவர்க்கங்களையும் ஒருவேளை உணவாகத் தானும் பாவிக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது. உலகிலேயே அதிக சுவையுள்ள பழவர்க்கங்களை உடையவர்கள் நாம் அல்லவா? யாழ்ப்பாண வாழைப்பழத்தின் இனிமை ஸ்ரீலங்காவில் தான் தெரியும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் சரியான நேரத்தில் சரியான திசையில் சாமி, குரக்கன் உற்பத்தியில் மக்களை ஊக்குவிப்பதையிட்டு எவரும் அதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. கோதுமை மாவைவிடப் பலமடங்கு தேகஆரோக்கியத்திற்கு உகந்ததான குரக்கன் உணவுப் பண்டங்களை எமது மக்கள் மறந்து போனமை கவலைக்குரியதுதான்.

பிரித்தானிய நாட்டு மக்கள் அன்று கடைப்பிடித்த வாழ்க்கை முறைகள் இன்று எமக்கு முன் உதாரணமாக

# தேன்கலந்த வரகுக்களி தென்தமிழீழ குழந்தைகளின் சத்துணவாகியது

பலாக்காயும் சேர்த்துத் தயாரிக்கப்படும் ஒடியற்கூழ் உணவு சிறுவர் முதல் முதியோர் வரை அனைவரும் விரும்பும் மிக மிகச் சுவையான சத்துணவென்பதை இன்று கூட எவரும் மறுத்துரைக்க முன்வரமாட்டார்கள். காலை உணவாக மரவள்ளி, கொம்புவள்ளி, இராசவள்ளிக் கிழங்கு வகைகளைப் பயன்படுத்தினர்.

இன்னுமொரு சிறிய தகவல் இன்றைய இளைய தலைமுறையினரை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கக் கூடும். அதாவது அன்றைய எமது கிராமத்து மக்கள் பெருமளவில் இலுப்பைப் பூவைக் கூடச்சேகரித்துக் காயவைத்துப்பின் வறுத்து இடித்து எள்ளுருண்டை போலத்தயாரித்து விரும்பி உண்டனர்; பனாட்டும் அவர்களுக்கு நல்லுணவாகியது. பனாட்டுத் தட்டுக்கள் சந்தைகளில் சந்தைப்படுத்தப்பட்டன. பனங்கட்டி சேர்த்துத் தயாரிக்கப்படும் குரக்கன் றொட்டிகளைச் சிறுவர்கள் மிகக் குதூகலமாகச் சுவைத்து மகிழ்ந்தனர். சீனிக்குப் பதிலாகக் குட்டான்களில் பனங்கட்டிகளே பாவ

வாழ்ந்த மக்கள் அனைவரும் தத்தமது கிராமங்களில் எவ்வெவ்வகையான உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டனவோ அவற்றையே மூன்று வேளை உணவாகவும் பயன்படுத்தினர். தென்தமிழீழக் குழந்தைகளின் உணவுப் பண்டங்களில் தேன் தடவப்பட்டது. வரகுக்களியே குழந்தைகளுக்கு மிகுந்த சத்துணவாகியது.

அந்தக் காலத்தில், விவாகம் புதுமனை புகல், பூப்புனித நீராட்டுதல், ஞானாரித்தம் சம்பந்தமான வைபவங்களில் மாத்திரமே அரிசிச்சோறு பரிமாறப்பட்டது. இத்தகைய வைபவங்களுக்கு அழைக்கப் படுபவர்கள் ''இன்று எங்களுக்கு ஒரு சோறுண்டு'' என்று தமக்குள் கதைத்துக் கொள்வர். பல கிராமங்களில் இன்று கூட இப்படிச் சிலர் கதைப்பது பழக்கத்தில் உள்ளது.

இந்தப் பழக்கத்திற்குக் காரணம் என்ன?

வழமையான மதிய உணவு சாமி அரிசிச் சோறுதான். ஆனால் வைபவரீதியான நாட்களில் மட்டும் அதற்கு விதிவிலக்கு. ''இன்று எங்களுக்கொரு சோறுண்டு'' என்

எதிர்பார்க்காத அவர்களது சுய வாழ்க்கை முறைகளே இதற்குக் காரணமாக அமைந்தது என்போர் வரலாறு தெரிந்தோர்.

அறுபது வருடங்களுக்கு முன்னர் இலட்சத்தில் ஒருவர் கூடத் தமிழ்க் கிராமங்களில் பாண் என்பதை அறியார். ஸ்ரீலங்காவிற்கு நேசக்கரம் நீட்டி அமெரிக்கா கோதுமை மாவை உதவத் தொடங்கிய காலம் முதல் அதன் பாவனை அகண்ட வட மாநிலத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அதிகமாகி விட்டது. இன்றோ கிராமங்கள் தோறும் பாண் சாலைகள். கடைகள் அனைத்திலும் பாணுக்கென கண்ணாடி அலுமாரிகள்.

தாண்டிக் குளத்தில்

வடக்கே வருவதற்காக உணவுப் பொருள்களுடன் வாகனங்கள் மாதக் கணக்கில் தவம் கிடக்கின்றன எனச் செய்திகள் கூறுகின்றன. பொருளாதாரத் தடையுடன்

கயவைக் கிழங்கு இந்த வருடம் எமது பகுதிகளில் அமோக விளைச்சல் கண்டது. ஒரு கிலோ கொடிக்கறணைக் கிழங்கைப் பத்து ரூபாவுக்குக் கூட விற்பனை செய்ய முடி

யாமல் யாழ்ப்பாண விவசாயிகள் கஷ்டப்பட்ட நிலை வேதனைக்குரியதாகிவிட்டது.

இன்று வாழைத்தோட்டச் சொந்தக்காரர்களுக்குக் கை கொடுத்து உதவக் கூடிய

வை. தாண்டிக்குளத்தைத் தாண்டி உணவு வாகனங்கள் நிரந்தரமாகவே வராதிருக்குமாயின் மாற்று வழிமுறைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது அனைவரதும் சிந்தனைக்குரியது.

எமது உணவுக்கு எம்மை நாமே நம்புவோம். பிறர் தயவின்றி எமது முன்னோர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறைகளுக்கு நாம் மீண்டும் தள்ளப்பட்டுக் கொண்டு வருகின்றோம். நன்றும் தீதும் பிறர் தரவருவன அல்ல என்பதே தமிழர்கண்ட வாழ்க்கை முறை. ★

மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை ஒரு தரம் திரும்பிப் பார்ப்பது நல்லது.

அன்றைய யாழ்ப்பாணக் கமங்கள் அனைத்திலும் சாமியும், குரக்கனும் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. நீர்ப்பாசன வசதியற்ற நிலங்களில் வரகு சாகுபடி செய்யப்பட்டது.

இது ஏதோ பூர்வீகக் கதை அல்ல. எங்கள் காலத்தில் நேற்று நடந்த கதைதான். கமக்காரர்களது இல்லங்கள் அனைத்திலும் மிகப் பாரிய பனை ஓலைக் கூடைகளில் அல்லது பத்தாயம் எனப்பட்ட பெட்டகங்களில் தலா இருபது, முப்பது பறை சாமியும், குரக்கனும் இருப்பில் இருந்தன. மதிய உணவுச் சோற்றுக்குச் சாமி அரிசியையும் இரவு உணவாகக் குரக்

என்னவென்று தெரியாதிருக்கும் நிலையையொத்த ஒருநிலை அதாவது யுத்தகால நெருக்கடிகள் காரணமாக அன்று பிரித்தானியாவில் வாழைப்பழஇறக்குமதியை நிறுபாட்ட வேண்டியதாயிற்று.

பிரித்தானிய நாட்டு மக்களுடைய கலியாண வைபவங்களை கேக் இன்றிக் கற்பனைபண்ணிப் பார்க்கத் தான்முடியுமா? அன்று யுத்த வேளையில் கேக் இன்றியே பிரித்தானிய நாட்டு விவாகங்கள் எல்லாம் மிகக் குதூகலமாக நடைபெற்றன. ஆடைகளுக்கான அலங்காரப் பின்னல் துணிப்பட்டிகளைப் பாவிப்பதையும் பிரித்தானிய அழகிகள் விட்டொழிந்தனர்.

பிரித்தானிய மக்கள் எவ்வெவ் வகையான சுகபோகங்களை எல்லாம் துறந்த

அறுபது வருடங்களுக்கு முன்னர் இலட்சத்தில் ஒருவர் கூடத் தமிழ்க் கிராமங்களில் பாண் என்பதை அறியார்...

இன்று கோமாரி கப்பல் மூலம் மா மாரி பொழியாவிட்டால் சாமாரி பொழியும் நிலை என்றாகிவிட்டதோ என்றே வினவத் தோன்றுகிறது.

அன்றைய யாழ்ப்பாணக் கமங்கள் அனைத்திலும் சாமியும் குரக்கனும் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. நீர்ப்பாசன வசதியற்ற நிலங்களில் வரகு சாகுபடி செய்யப்பட்டது.


கமக்காரர்களின் இல்லங்கள் அனைத்திலும் பத்தாயம் எனப்பட்ட பெட்டகங்களில் தலா இருபது, முப்பது பறை சாமியும், குரக்கனும் இருப்பில் இருந்தன.

இது ஏதோ பூர்வீகக் கதை அல்ல. எங்கள் காலத்தில் நேற்று நடந்த கதை தான்!

-செல்லப்பா நடராசா-

---

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**இராசரெத்தினம் பரமலிங்கம்**
(இளைப்பாறிய தலைமைத்தாதி யாழ். போதனா வைத்தியசாலை)

மலர்வு: 21 — 06 — 1928
மறைவு: 04 — 06 — 1987

திதி: 06 — 06 — 1995

பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் எங்கள் வாழ்வின் ஒளிவிளக்காய் எம்மையெல்லாம் வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
கணவன், வ. பரமலிங்கம்
சகோதரி, பிள்ளைகள்,
மருமக்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்

குளங்கரை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(36924)

---

## புலிகளின் குரல் வானொலியில்

**ஞாயிறு இரவு**
04 06 1995

★ 8-02 — இசையரங்கம் பிரம்மஸ்ரீ மோகன் சர்மாவின் வயலின் கச்சேரி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 கடந்த 27 ஆம் திகதி மட்டக்களப்பு தரவைக்குளம் இராணுவ முகாம் முற்றாக தாக்கி அழிக்கப்பட்ட வீரசாதனையை பொட்டிய சிறப்பு நிகழ்ச்சி - குணேந்திரன் எழுதிய ''மறப்போமா நினைப் பதற்கு''

**05 — 06 — 1995**
**திங்கள் காலை**

★ 7-02 —மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

**ஞாயிறு மாலை**

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 புதியவை
★ 5-15 மழலைகளுக்காக
★ 5-30 — கதம்பம்
★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
★ 6-02 — உங்கள் தெரிவு

## படையினருக்கு உதவுவதற்கு விசேட நிதியம்

கொழும்பு, ஜூன் 4

வடக்கு, கிழக்கு பகுதிகளில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினருக்கு உதவுவதற்கென தென்மாகாண சபை விசேட நிதியம் ஒன்றை நிறுவ உள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை தாம் மேற் கொண்டுள்ளதாக மேற்படி மாகாண முதலமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

இந்நிதியத்தின் உதவியுடன் பாதுகாப்பு பகுதி அதிகாரிகளுக்குத் தேவையான பொருள்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஆலயங்களில்

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்து மாரியம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12நாட்கள் நடைபெறும்.

எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் அன்றைய தினம் மாலை 3மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஓ-14)

★ ★ ★

நாகர்கோயில் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை திங்கட்கிழமை நடைபெறும். (ஓ-173)

★ ★ ★

பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த நவ நாள் உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது. 13ம் திகதியன்று திருப் லி பூசை நடைபெறும். (க-135)

## இன்று

சண்டிலிப்பாய் மணிமேகலை சிறுவர் அறிவாலயத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் அறிவாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## கடிதங்களை சேர்க்குக

யாழ்ப்பாணம், ஜூன் 4

குடா நாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர் தபால்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ''சீ-டான்ஸர்'' கப்பல் மூலம் இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட உள்ளன.

அதற்கு வசதியாக பொது மக்கள் தமது கடிதங்களை நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முன் யாழ். பிரதம தபாலகத்தில் சேர்க்குமாறு பிரதம தபாலதிபர் திரு.சு. சோமசுந்தரன் கேட்டுள்ளார். [ஐ]

## அடுத்த மாதம் பொலீஸ் மா அதிபர் ஓய்வு

கொழும்பு, ஜூன். 4

பொலீஸ்மா அதிபர் பிராங்டி சில்வா அடுத்த வாரம் முதல் ஓய்வுக்கு முந்திய விடுமுறையில் செல்லவுள்ளாரென ''தினமின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் அடுத்தமாதம் 25ஆம் திகதி முதல் ஓய்வு பெறவுள்ளார்.

புதிய பொலீஸ் அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் டபிள்யு. பி. ராஜகுரு நியமிக்கப்படலாம் என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களில் பேச்சடிபடுகிறதாம்.

## போசாக்கு சுகாதார வாரபோட்டிகள்

வலிமேற்கு பிரதேச செயலகத்தின் போசாக்கு சுகாதார வாரத்தை ஒட்டியகலை நிகழ்ச்சிகளுக்கான போட்டிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என வலி. மேற்கு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். [ஞ-14]

---


## வெளிவந்துவிட்டது!
## விற்பனையாகிறது!

★ 1995ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்-தொடக்கம் நடைபெறும் ஆண்டு-5, புலமைப்பரிசில் தேர்வுக்குரிய நூல்.

★ கற்கைத்திறனை மதிப்பிடும் பொது விவேகமும், ஆண்டு1 – 5வரையுள்ள அனைத்துப்பாடப்பொருட் பரப்பைக் கொண்ட பொதறிவும் இணைந்த நூல்

★ ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த கற்கைநூல்

**ஆண்டு - 5**
**புலமைப்பரிசில் தேர்வு - 1995**

(பொது விவேகம் பொதறிவு)

வெளியீடு: சிறி சுப்பிரமணியம் பொத்தகக் களஞ்சியம், யாழ்ப்பாணம்

[36925]



# தமிழீழ மாணவர் எழுச்சி நாள்
# யூன் 6
## வாழ்த்துச் செய்தி

கல்விச் சமூகமே ஒன்றிணைவோம்
தேச நலனை முன்னெடுப்போம்

வாழ்த்துபவர்கள்
வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா இராணுவத்தை விட்டுவிட்டு

# சிங்களச் சிப்பாய்கள் தப்பி ஓடுவது ஏன்?

"இதுவரை இராணுவத்திலிருந்து தப்பி ஓடியோரின் தொகை பூநகரி இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினரின் தொகையில் ஒன்பது மடங்காகும். அந்த அர்த்தத்தில் பார்ப்போமானால் பூநகரி முகாம் போன்ற ஒன்பது இராணுவ முகாம்களை அந்தச் சிப்பாய்களைப் பயன்படுத்தி உருவாக்க முடியும். இராணுவத்தினரின் தகவல்களின்படி வடக்கில் பல்வேறு இராணுவ முகாம்களில் சுமார் 30, 000 சிப்பாய்கள் பணிபுரிகின்றனர். எனவே தப்பி ஓடியோர் தொகை வடபகுதியில் தற்போது கடமையாற்றுவோரின் தொகையிலும் பார்க்க 2000 மாத்திரமே குறைவு"

—"ராவய" சிங்கள வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

தென்னந் தோட்டத்தினூடாக இராணுவ வாகனம் ஒன்று வருகிறது. இதைக் கண்ட கிராமத்து இளைஞன் குசினியின் பின்புற வழியாக பாய்ந்து சிறு பற்றைகள் ஊடாகச் சென்று காட்டில் மறைந்தான். விரைந்து வந்த ஜீப் மண்குடிசையின் முற்றத்தில் நின்றதும் அதிலிருந்து இறங்கிய இராணுவப் பொலீஸார் அக்குடிசையைச் சுற்றி வளைத்தனர்.

குடிசைக்குள் இருந்த தாய் வெளியே வந்தாள்.

''எங்கே மகன்?'' — என வயதான அதிகாரி உரத்த குரலில் கேட்கவே தாய் அச்சத்திற்குள்ளானாள்.

'அவன் வரவில்லை ஐயா'

'பொய் சொல்ல வேண்டாம்'

'இல்லை ஐயா, பல மாதங்களாக அவனைக் காணவே இல்லை'

இதற்கிடையில் வீட்டைச் சோதித்த இராணுவப் பொலீசார் வெறுங்கையுடன் வெளியே வந்தனர். சிறிது நேரத்தில் ஜீப் புறப்பட்டுச் சென்றது.

அடுத்த மணித்தியாலம் காட்டின் மறுபுறத்திலிருந்த கசிப்பு விற்கும் கடையில் அந்த இளைஞன் காணப்பட்டான் தனது மனத்துயர் தீர கசிப்பு அருந்திவிட்டு கள்ள வழியால் கடை வீதியோரமாக மோப்பமிட்டவாறு வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான்.

மோட்டார் சைக்கிள் ஒன்று 'பிறேக்' பிடித்தவாறு அவனருகில் வந்து நின்றது. அதில் இவனைப் போல இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய இளைஞன் ஒருவன் வந்திருந்தான்.

'இன்றும் மயிரிழையில் உயிர் தப்பினேன்'

'நானும் நூலிழையிலேயே தப்பினேன்'

'இந்த விளையாட்டை எப்போதும் விளையாட முடியாது.'

'இது ஒரு பாவவினை; வெளியே வர முடியாமல் இருக்கிறதே!

'வீட்டில் இருக்கவும் முடியாது. பணமின்றி வாழவும் முடியாது தாய் சகோதரங்கள் படும் துன்பத்தைப் பார்த்துக் கொண்டும் இருக்க முடியாது.'

'என்ன செய்வோம், செலவுக்கு எப்படியும் பணம் வேண்டுமே. தெரிந்த வித்தைகளைப் பயன்படுத்தி பணம் சேர்க்க வேண்டியது தான்'— எனக்கூறிக் கொண்டு இளைஞர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் ஏறிச் செல்கிறார்கள்.

### எங்கே செல்கிறார்கள்?

இவர்கள் எங்கே செல்கிறார்கள்? சில சமயம் அவர்கள் கொள்ளை அடிக்கவும் செல்லக்கூடும் அல்லது கடையை அல்லது வீட்டை உடைத்துக் களவெடுக்கச் செல்கிறார்களோ தெரியவில்லை. யாருடைய சங்கிலியை அறுக்கச் செல்கிறார்களோ என்னவோ!

இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய இருவர் தொடர்பான சம்பவத்தையே நாம் மேலே கூறியிருந்தோம்.

இதுவரை இவ்வாறானவர்கள் சுமார் 28 ஆயிரம் பேர் அல்லது அதற்குச் சற்று அதிகமானோர் இராணுவத்திலிருந்து தப்பி ஓடி மறைந்து வாழ்கின்றனர்.

இராணுவத்திலுள்ள ஒவ்வொரு நான்கு சிப்பாய்களுக்கு ஒருவர் என்ற வீதத்தில் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

இவ்வாறு இதுவரை தப்பி ஓடியோரின் தொகை தற்போது 'பூநகரி முகாமிலுள்ள இராணுவத்தினரின் தொகையின் ஒன்பது மடங்காகும். அந்த அர்த்தத்தில் பார்ப்போமானால் பூநகரி முகாம் போன்ற ஒன்பது இராணுவ முகாம்களை அந்தச் சிப்பாய்களைப் பயன்படுத்தி உருவாக்க முடியும். இராணுவத்தினரின் தகவல்களின்படி தற்போது வடக்கில் பல்வேறு இராணுவ முகாம்களில் சுமார் 30 ஆயிரம் சிப்பாய்கள் பணிபுரிகின்றனர். எனவே தப்பி ஓடியோர் தொகை வடபகுதியில் தற்போது கடமையாற்றுவோரின் தொகையிலும் பார்க்க 2000 மாத்திரமே குறைவு.

### தப்பி ஓடுவது ஏன்?

நாட்டைப் பாதுகாக்க இராணுவத்தில் சேர்ந்த இவர்கள் தற்போது தங்களையே பாதுகாக்க ஏன் தப்பிச் சென்றுள்ளனர்?

இராணுவத்தில் சேர்ந்தது தமது பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வாக வேலை ஒன்றைத் தேடுவதற்கே ஒழிய போர் செய்வதற்காக அல்ல

## இராணுவச் சிப்பாய்களின் அவல நிலை குறித்து ஓர் ஆய்வு

என்பதாலா? சண்டையிட விருப்பமில்லாத காரணத்தினாலா? யுத்தத்திற்குப் பயந்த காரணத்தினாலா? இராணுவத்தில் தொடர்ந்து பணியாற்றத் தேவையான மனதிடம் இல்லாததாலா? இராணுவ மேலதிகாரிகள், அரசியல்வாதிகள் மீது கொண்ட விரக்தியினாலா? புலிகளுக்குக் கிடைப்பது போன்ற நல்ல பயிற்சி தங்களுக்கு அளிக்கப்படாததாலா? — இதற்கான விடையை நாம் தேட முயற்சிப்போம்.

### இராணுவத்தின் அமைப்பு

''வாருங்கள், எங்களுடன் இணையுங்கள்''

''இதோ உங்களுக்கும் போர் வீரர் வரம்''

இன்று இராணுவத்திலிருந்து தப்பி ஓடுகிறவர்கள் அன்று இராணுவத்தில் சேர்ந்ததற்குக் காரணம் மேற்கண்ட விளம்பரங்களை பத்திரிகைகளிலும் சுவரொட்டிகளிலும் கண்டு தங்கள் மனதைப் பறிகொடுத்ததே யாகும். தொலைக்காட்சி விளம்பரங்களும் அவர்களைக் கவர்ந்தன. அவர்களை இராணுவத்தில் சேர்ப்பதற்காக எடுக்கப்பட்ட சகலரும் முயற்சிகள், அவர்கள் இராணுவத்தில் சேர்ந்த பின்னர் அவர்களை இராணுவத்தில் தக்கவைக்க இராணுவ உயர்பீடத்தினால் ஏன் பயன்படுத்த முடியாமற் போயிற்று?

போர் நடைபெற்று வரும் இவ்வேளையில் இவ்விடயம் பற்றி விமர்சனம் செய்யக்கூடாது என போரில் வெற்றி பெறலாம் என்ற ஆசையுடன் இருக்கும் பொறுப்புடையவர்கள் கூறக்கூடும்; யுத்தம் நடைபெறும்போது மாத்திரமன்றிச் சாதாரண காலங்களிலும் கூட இவ்விடயம் பற்றி விமர்சிக்கக் கூடாது என பொறுப்புடைய இராணுவ அதிகாரிகள் சில சமயம் கூறவும் கூடும்.

ஆனால் இப்பிரச்சினைக்கு முடிந்தளவு விரைவாகத் தீர்வினைக் காண வேண்டும் என நாம் கூறுகிறோம். இவ்விடயத்தைப் பின்போடுவதும் அல்லது மூடிமறைப்பதும் நிலைமை மோசமடையக் காரணங்களாக அமையும் என்பதை நாம் உணர வேண்டும்.

இப்பிரச்சினையால் ஏற்படும் முக்கிய பாதிப்புகள் இரண்டு உள.

ஒன்று, இராணுவத்தின் ஆற்றல், முயற்சி, செலவு ஆகியன வீணாகின்றன.

மற்றையது பாதாள உலகக் கலாசாரம் என்ற விஷம் சமூகத்தில் பரவ இது காரணமாக அமைகிறது.

இப்பிரச்சினை காரணமாகப் போர் ஆரம்பித்து, கடந்த 12 ஆண்டுகளில் இவ்வாறு பெருந்தொகையானோர் ஏன் இராணுவத்திலிருந்து தப்பி ஓடுகிறார்கள் என்பது குறித்து, போரில் சிக்கியுள்ள ஒரு நாட்டை ஆளுபவர்களினதும், இராணுவ உயர்மட்டத்தினதும் கவனம் ஈர்க்கப்படாதிருப்பது விந்தையான ஒன்றாகும்.

அவ்வாறான பாரதூரமான ஒரு விடயம் குறித்து ஆராய்வதை விடுத்து மீண்டும் மீண்டும் பாதுகாப்புப் படைகளுக்கு ஆட்திரட்டுவதும், மீண்டும் மீண்டும் பயிற்சிகளை அளிப்பதும் அது தொடர்பாக பெருமளவில் நிதியைச் செலவிடுவதும் ஒரு புறத்தில் பாரதூரமான குற்றமாகும்.

இராணுவ சேவையில் ஈடுபடுவோர் இராணுவத்தை விட்டுத் தப்பிச் செல்வது 1980க்கும் — 1990க்கும் இடைப்பட்ட காலத்தின் முற்பகுதியில் ஆரம்பமாகியது. வடக்கு — கிழக்கில் யுத்தம் தீவிரமடைய இராணுவத்திலிருந்து தப்பியோடுவோரின் தொகையும் படிப்படியாக அதிகரித்தது. முதலில் தொண்டர் படையணிகளைச் சேர்ந்தோரே தப்பி ஓடும் முயற்சிகளில் ஈடுபட்டனர். இது படிப்படியாக வளர்ச்சியடைந்து பின்னர் நிரந்தர சேவையில் பணியாற்றுவோரும் உயரதிகாரிகளும் தப்பி ஓடும் வேக வீதம் அதிகரிக்கத் தொடங்கியது.

### காரணங்கள்

போர்க்களங்களுக்குச் செல்ல விரும்பாமை, பதவி உயர்வுகள், அரசியற் தலையீடுகள், புலமைப் பரிசில் வழங்கல் ஆகிய பிரச்சினைகளே இராணுவ உயரதிகாரிகள் இராணுவத்தை விட்டுத் தப்பியோட முக்கிய காரணங்களாய் அமைந்தன.

மனவலிமை போதாமை, தேவையான, உரிய பயிற்சிகள் வழங்கப்படாமை, அத்தியாவசிய வசதிகள் வழங்கப்படாமை, உணவுப்பிரச்சினை, உயரதிகாரிகளின் தொந்தரவுகள் ஆகியன சிப்பாய்கள் இராணுவத்தை விட்டுத் தப்பியோடப் பிரதான காரணங்களாய் அமைந்துள்ளன.

பணியில் நிரந்தரமற்ற தன்மை, ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கு அருகதையில்லாமை, உடலூனமுற்றால் போதிய நட்டஈடு வழங்கப்படாமை, மரணமடைய நேரிடின் தளங்களில் தங்கியிருப்போருக்கு நியாயமான நட்டஈடு வழங்கப்படாமை ஆகியன தொண்டர் படையணிகளைச் சேர்ந்த சிப்பாய்கள் இராணுவத்தை விட்டுத் தப்பியோட முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன.

### தொண்டர் படையணிகளின் நிலை

இராணுவத்தின் நிரந்தர படைப் பிரிவுகளிலும் பார்க்க தொண்டர் படையணிகளிலேயே பெருமளவிலான சிப்பாய்கள் தற்போது உள்ளனர். அவர்களுக்கு உரிய முறையில் பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை. உக்கிரமான ஒரு போரில் மனத் தைரியம் பலவீனமடைவதற்கும், இராணுவம் தனது கௌரவத்தை இழப்பதற்கும் வடக்கு — கிழக்குப் போரில் இராணுவம் வெற்றிபெற முடியாமலிருப்பதற்கும் இதுவே முக்கிய காரணமாகும். இராணுவத்தினரின் பயிற்சிக் காலம் குறைக்கப்பட்டதினாலும், வடக்கு — கிழக்குப் புவியியல் நிலைமைக்கு முற்றிலும் மாறுபட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள முகாம்களில் பயிற்சிகள் அளிக்கப்படுவதினாலும் வடக்கு — கிழக்குப் போர் முனைகளுக்கு அனுப்பப்படும் சிப்பாய்களின் உளஉரம் பாதிக்கப்படுகிறது. இதுவே அவர்கள் இராணுவத்தைக் கைவிட்டுச் செல்லக் காரணமாக அமைகிறது.

நிரந்தரப் பதவிகளற்ற தொண்டர் படையணிகளைச் சேர்ந்த சிப்பாய்களுக்கு உரிய பயிற்சிகளை அளிக்காமல் அவர்களைக் கொண்டு வடக்கு — கிழக்குப் பிரதேசங்களிலுள்ள இராணுவ முகாம்களை நிரப்புவதால் போர் முனைகளிலிருந்து தப்பி ஓடுவோரின் தொகையும், சூட்டுக்கு இலக்காகி மரணமடைவோரின் தொகையும், காயமடைந்து அங்கவீனர்களாவோரின் தொகையும் அதிகரிக்கிறது.

### துன்பகர நிலை

அனுராதபுரம் — மன்னார் மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ள 'கட்டுபெத்த' இராணுவ முகாம் மீது 1993 இல் விடுதலைப்புலிகள் இரண்டாவது முறையாக மேற்கொண்ட தாக்குதலின்போது இறந்த 120 சிப்பாய்களில் 90 சிப்பாய்கள் தங்களது முதலாவது மாதச்சம்பளத்தையே பெறாதவர்கள் என்பதிலிருந்து துன்பகரமான நிலைமை தெளிவாகிறது.

### சிப்பாய் கூறியது

மீண்டும் போர் ஆரம்பிப்பதற்குச் சில நாட்களுக்கு முன்பு அதாவது மோதல் தவிர்ப்பு உடன்பாடு இருந்த வேளையில் திருகோணமலையில் பதில் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் முப்படைத் தளபதிகளின் முன்னிலையில் சிப்பாய் ஒருவர் தெரிவித்த கருத்து இந்த ஞாபகத்திற்கு வருகிறது.

''யுத்தத்திற்கெனக் கொண்டுவரப்பட்டு நாங்கள் நரகத்தில் தள்ளப்பட்டிருக்கும் வேளையில் அதே யுத்தத்தைப் பயன்படுத்தி அதிகாரிகள் சுகபோகங்களை அனுபவிக்கின்றனர். நான் இவ்வாறு கூறுவதால் எனக்கு தண்டனைகள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன். நித்திரை கொள்ளக்கூடப் போதிய வசதிகளின்றி நாங்கள் துன்பப்படும் போது, எங்களைக் கொண்டு அதிகாரி தனது வீட்டின் நிலத்திற்கு தினமும் பொலிஷ் பண்ணுவிக்கிறார். நான் கூறுவது பொய்யானால் அமைச்சரே சென்று பார்க்கலாம். அதிகாரியின் வீட்டில் நாங்கள் கால் அடியெடுத்து வைக்கும் போது வழுக்கி விழுவோமோ என்ற பயம் அவ்வளவுக்குத் தரை மினுக்கப்பட்டுள்ளது.

''பல கோடி ரூபா செலவில் அண்மையில் கடற்படைக்கு கணனிகள் வாங்கப்பட்டன. அவை யுத்த தேவைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டனவா அல்லது கொமிஷன் பெறுவதற்காகக் கொள்வனவு செய்யப்பட்டனவா என அமைச்சர் ஏன் கண்டறியவில்லை? நாங்கள் அதுபற்றிக் கதைத்தால், கேள்வி எழுப்பினால் அதிகாரிகள் எங்கள் மீது பாய்வார்கள்; தூஷண வார்த்தைகளால் ஏசுவார்கள். இன்று காலை கூட ஒரு அதிகாரி கெட்ட வார்த்தைகளால் என்னை ஏசினார் ஒரு புறத்தில் நாங்கள் துன்பப்படுகிறோம். மறுபுறத்திலோ அதிகாரிகள் சுகபோகம் அனுபவிக்கிறார்கள். இந்த யுத்தத்தை நடத்த முடியாது - என்றார்.

### இன்னொரு இளைஞர் கூறியவை

இராணுவப் படையணி ஒன்றில் சேர்ந்து சில மாதங்களுக்குப் பின்னர் இராணுவத்தைவிட்டுத் தப்பி ஓடிவரும் இன்றும் இராணுவப் பொலீசாரினால் தேடப்பட்டு வருபவருமான இளைஞர் ஒருவர் எங்களுடன் பகிர்ந்து கொண்ட விடயங்கள் வெளியிட முடியாத பாரதூரமானவையாகும்.

''நாங்கள் நேர்முகப் பரீட்சையில் தெரிவான பின்னர் எமக்கு அளிக்கப்பட்ட பயிற்சியைக் கொண்டு துப்பாக்கியை சரியான இலக்கு நோக்கிப் பிடிப்பதே கடினம் அதிகாரிகளின் தூஷண வார்த்தைகளைக் கேட்பதாலோ அல்லது வெறும் உடற்பயிற்சியைக் கொண்டோ போரிட முடியாது.

சில மாதங்களுக்குப் பின்னர் மட்டக்களப்பில் காட்டின் மத்தியில் அமைந்த ஒரு இராணுவ முகாமிற்கு என்னை மாற்றினர். அப்போது எனக்கு இரண்டு தீர்வுகள் தென்பட்டன. போர் புரிய முடியாத ஆற்றாமையால் மரணமடைவதா அல்லது தப்பி ஓடி உயிர் பிழைப்பதா? என்பனவே அவையாகும். எனக்கு இப்போது இராணுவத்தினரிடம் அல்லது பொலீசாரிடம் அகப்படுவேனோ என்ற பயம் இருக்கத்தான் செய்கிறது ஆனால் வீணாக இறக்க நேரிடும் என்ற பயம் இல்லை. — என்றார் அவர்.

### சுயகௌரவம்

சுய கௌரவம் பாதிக்கப்படுவதும் ஒரு பாரதூரமான பிரச்சினையாகும். தென் ஆசியாவிலுள்ள குறிப்பாக எமது அயல் நாடுகளான இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் சிப்பாய்களுடன் ஒப்பிடுகையில் எமது சிப்பாய்களின் கல்வி அறிவு உயர்நிலையில் உள்ளது. அத்துடன் இந்தியாவில் பரம்பரை பரம்பரையாக இராணுவத்தில் சேரும் வழக்கம் எமது நாட்டிலில்லை. இதனால் அயல் நாடுகளிலுள்ள சிப்பாய்களிலும் பார்க்க அதிகமாக எமது சிப்பாய்களுக்கு — மத்தியதர வர்க்கத்திற்குரிய — சுயகௌரவம் பற்றிய உணர்வுகள் உண்டு. ஆங்கில அறிவைப் பொறுத்த வரையிற் கூட எமது சிப்பாய்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே பாரிய வித்தியாசத்தைக் காணமுடியாது.

### மற்றொருவரின் கருத்து

''அன்று இராணுவத்தில் சேர்வதற்காக நான் வரிசையில் முண்டியடித்துக் கொண்டிருந்தேன். எங்களை ஒழுங்காக நிற்குமாறு பணித்துக் கொண்டிருந்தவர் ஒரு சாதாரண சிப்பாயே. ஆனால் நாங்கள் கூலிவேலைக்கு வந்தவர்கள் என்ற நினைப்பில் அவர் நடந்துகொண்டார். ஆரம்பத்திலிருந்தே எமக்கு ஒரே ஏச்சுக்களும் திட்டல்களும்தான். அவற்றை எல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தோம் என வைத்துக் கொள்ளுங்கள், உயரதிகாரியின் அறைக்குள் ஒருவர் மாத்திரமே உட்செல்ல அனுமதிக்கப்படுகிறார். அவர் வெளியே வரும் வரை அந்தப் பக்கமே மற்றவர்கள் பார்க்கக் கூடாது. அடுத்து என்னைத்தான் நேர்முகப்பரீட்சைக்காக கூப்பிட்டிருந்தனர். நான் தற்செயலாக அந்த அறையை நோக்கிப் பார்வையைச் செலுத்தினேன் அப்போது காதைப் பொத்தி ஒரு அறை விழுந்தது என்னைத்தாக்கிய சிப்பாய் என்னை ஒத்த உடலமைப்பைக் கொண்டவர். அவர் வேறு இடத்தில் என்னைத் தாக்கியிருந்தால் அவரைச் சரியான முறையில் கவனித்திருப்பேன். ஆனால் நேர்முகப்பரீட்சைக்கு வந்த இடத்தில் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் வேதனையைச் சகித்துக் கொண்டிருந்தேன். ஆனால் இராணுவத்தில் சேரும் நோக்கத்தைக் கைவிட்டு விட்டேன் ''இது மற்றொருவரின்

(4ஆம் பக்கம் பார்க்க)

★ அன்று பாபர்மசூதி..... இன்று ஷராரே ஷெரீப்.. ...

# ஆதாயம் தேடும் இந்திய அரசியலில்

# செல்லாக்காசாகும் மத தலங்கள்

அரசியல் நெருக்கடிகளும் மதக்கலவரங்களும் மலிந்துவிட்ட இன்றைய இந்தியாவில்—

அரசியல், மத குரோதங்களில் அகப்பட்டு சிதைக்கப்படுவது மனித உயிர்கள் மட்டுமல்ல; மதத்தலங்களும் தான்.

உயிரின் விலையே செல்லாக்காசாகிவிட்ட இன்றைய நிலையில் புனிததலங்கள் ஒரு பொருட்டா?

இந்திய அரசியல் நெருக்கடிகளிலும், கலவரங்களிலும், புனிததலங்கள் இரையாகிப் போவது தொடர்கதையாகிப் போன நிலையில்—

பஞ்சாப் பொற்கோயில், உத்தர பிரதேச பாபர் மசூதி காஷ்மீர் ஹஸ்ரத் பால் போன்ற புனித தலங்களின் அழிவு அத்தியாயங்களுடன் இன்று காஷ்மீரிய ஷராரே ஷெரீப் ஷியாரம் என்ற புதிய அத்தியாயமும் இணைக்கப்பட்டு விட்டது.

கடலும், ஆறும், மலையும் மடுவும், மலரும், சோலையும் சூழ்ந்து நிற்கும் வனப்பு மிகு கஷ்மீரில், அமைதி தவழும் ''ஷராரே ஷெரீப்'' கிராமம்

அதே கிராமம் இன்று இந்தியப் படைகளுக்கும், இஸ்லாமிய போராளிகளுக்கும் இடையிலான யுத்தகளமாக மாற்றப்பட்டுள்ளது.

சுயாட்சி கோரி போராட்டம் நடத்தும் காஷ்மீர் மக்களை இந்திய அரசும், பாகிஸ்தான் அரசும் பகடைக்காய்களாக்கி, மத உணர்வுகளை தூண்டி கலவரங்களை உண்டாக்கி அரசியல் நடத்துகின்றன.

விளைவு, அமைதி கீதம் இசைத்துக் கொண்டிருந்த இக் கிராமத்தில் துப்பாக்கி வேட்டுக்களின் அபஸ்வர ஒலி தொடர்ந்து ஒலிக்கின்றது.

இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்திற்குள்ளேயே, பிற இடத்தான் போராளிகள் போர் தொடுத்திருப்பது இந்திய அரசியல் நெருக்கடியை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

இரு தரப்பாருக்கும் இடையேயான போரின் ஒரு கட்டத்தில் முஜாஹுதீன் என்ற முஸ்லிம் போராளிகள் அமைப்பைச் சார்ந்த சுமார் 60 பேர் காஷ்மீர் ''ஷராரே ஷெரீப்'' பில் உள்ள முஸ்லிம்களின் புனிததலத்தினுள் புகுந்துகொண்டனர்.

இதனை அடுத்து புனித தலத்தினை ஆக்கிரமித்துள்ள முஸ்லிம் தீவிரவாதிகளை ஒடுக்கப் போவதாக முழங்கிக் கொண்ட இந்தியப் படை, புனித தலத்தை சுற்றி வளைத்தது.

### புனித தலத்தின் வரலாறு

சுமார் 550 ஆண்டுகள் பழமை வாய்ந்த இத்தலத்தில், பஞ்ஞாடிய சூ'டி ஞானியான ஷேக் நாராணி நூர்தீன் வொலியுல்லாஹ் என்பவரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது

மிக உயர்ந்த கருத்துக்களை மக்களிடையே பரப்பி வந்த இவர், இந்து முஸ்லிம் சமுகத்தாரிடையே நல்லிணக்கம் ஏற்படுமாறு செயல்பட்டார்

இதனால் காஷ்மீரிய கலாசாரத்திற்கு அடிநாதமாக திகழ்பவர் இவர் என்று அவரது காலத்திலேயே போற்றப்பட்டார்.

''நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள். எம்மிடையே ஏன் இந்த வேற்றுமை? இந்துக்களும், முஸ்லிம்களும் கடவுளை ஒன்றாக வழிபட்டும். லாபத்தையும் நட்டத்தையும் நாம் ஒன்றாக பகிர்ந்து கொள்வோம்'' என்பது போன்ற சிறந்த பல கருத்துக்களை அவர் வெளியிட்டார்.

இந்துக்களாலும், முஸ்லிம்களாலும் துதிக்கப்பட்ட இந்த ஞானி மறைந்தபின் அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் சதுரவடிவ கட்டடம் ஒன்று 1460ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.

40 அடி விஸ்திரணம் உடையதாக இந்த அடக்கஸ்தலம் காணப்பட்டது.

மிக நுணுக்கமான அழகிய வேலைப்பாடுகளுடன் கூடியதாக அது அமைக்கப்பட்டது.

காஷ்மீரில் வேறு எவருடைய கல்லறையும் இத்தகைய அருமையான வேலைப்பாடுகளைக்கொண்டு அமையவில்லை என்பது பலரது அபிப்பிராயமாகஇருக்கிறது.

இத்தகைய பெருமை வாய்ந்த, சிறப்பு மிக புனித தலமே இன்று வன்முறை அரசியல் சதுரங்கத்தில் சிக்கி நாசமாகி விட்டது.

இஸ்லாமியரின் புனித நாளான கடந்த ஹஜ் பெருநாளில், இந்த தலம் தீக்கு இரையாக்கப்பட்டது.

அதாவது 400 ஆண்டு கால வரலாற்றுப் பெருமை மிகு பாபர் மசூதி 'கர சேவையாளர்' என பெயர் பூண்டோரால் இடித்து நொறுக்கப்பட்டது போன்று, இன்று

**- ஆதிரை -**

550 ஆண்டு காலபுகழ் வாய்ந்த காஷ்மீரிய ஷராரே ஷெரீப் ''பச்சை மசூதி தீவிரவாதிகள்'' என பெயர் பூண்டோரால் தீவைத்து கொளுத்தப்பட்டது.

இந்த நாசகார வேலைகளை செய்தது சந்தேகமற பாகிஸ்தானே என்று இந்தியாவும். இந்தியதான் தனது படையினரின் மூலம் இதனைச் செய்தது என்று பாகிஸ்தானும் மாறி மாறி ஒன்றின் மீது ஒன்று குற்றம் சாட்டிக் கொண்டிருக்கின்றன.

இரு நாடுகளின் தலைவர்களும் இந்தச் சம்பவத்துக்காக மறக்காமல் நீலிக் கண்ணீர் வடித்தனர்.

காஷ்மீரில் நடத்தப்பட இருந்த மாகாணத் தேர்தல்களும், இச்சம்பவத்தை அடுத்து பிற்போடப்பட்டுள்ளன.

எனினும் உ[illegible] வாளிகள் யார் என்ற வினா, விடை கா[illegible]

இன்றுவரை உள்ளது எங்கோ ஒரு மூலையில் அது ஒளிந்து விட்டது.

### பாகிஸ்தான் தீவிரவாத அமைப்பு

இதற்கிடையில் பாகிஸ்தானில் உள்ள ''ஹரக்கத்துல் அன்சார்'' அமைப்பின் பேச்சாளர் ஒருவர் சர்வதேச செய்தி ஸ்தாபனங்களுக்கு அளித்த பேட்டியில், தமது அங்கத்தினர் எரிக்கப்பட்ட இந்த புனித தலத்தினுள் இருந்தனர் என்றும், அவர்களுள் சிலர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

அத்துடன் இந்தியாவுக்கு எதிரான ''ஜிஹாத்'' (புனிதப் போர்) தொடரும் எனவும், புதுடில்லியையும், பம்பாயையும் தாம் தாக்குவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''ஷராரே ஷெரீப்'' நாசமாக்கப்பட்டபின் கைது செய்யப்பட்ட இந்த அமைப்பின் போராளி ஒருவர்,''இத்தலத்தினுள் இருந்த கூலிப்படைகளே அதனை நிர்மூலமாக்கின'' என்று சாட்சியமளித்துள்ளதாக இந்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன் காஷ்மீரில் உள்ள ''ஹஸ்ரத்பால்'' புனித தலத்தை நிர்மூலமாக்குவதற்கான முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது கைகூடாமல் போயிற்று.

இம்முறை தமது நாசவேலையை பூரணப்படுத்த வேண்டுமென்று தீவிரவாதிகள் நிச்சயப்படுத்திக் கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

### மாறி மாறி குற்றச்சாட்டு

இவ்வாறு பாகிஸ்தானுக்கு எதிராகவும், பாகிஸ்தானில் நிலை கொண்டுள்ள ''ஹரக்கத்'' போராளிகளுக்கு எதி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

சகல வசதிகளுடனும் புதிய வீடு வளவு விற்பனைக்கு உண்டு. S. W. சோமசன், இல. 3, சந்தனமாதா கோயில் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (36900)

திருநெல்வேலி விவசாய பாடசாலைக்கு அண்மையில் சகல வசதிகளையும் கொண்ட புதிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பார்வையிடலாம். 159, பலாலி வீதி, கோண்டாவில். [36827]

கொய்யாத்தோட்டம் பிள்ளையார் கோயில் முன் ஒன்றரைப் பரப்புக் காணியுடன் நான்கு அறைகள் பெரிய ஹோலுடன் ஓட்டு வீடு, விசாலமான முற்றத்துடன் விற்பனைக்கு. கச்சேரி, பிரபல்யமான கல்லூரிகள் 300 யார் தூரத்தில். தொடர்பு: V. சின்னையா, இல. 17/4, புது வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (36913)

கண்ணாடி மேசை, Folding Cot, அன்டெனா பைப்புகள் விற்பனைக்குண்டு தொடர்பு 71/5, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (36898)

முட்டையிடும் பருவக் கோழிகள் கூட்டுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: M. A. ராதா ஆனைக்கோட்டை வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (36920]

## தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்குகந்த நல்ல ரக தென்னம் நாற்றுக்கள் விற்பனைக்குண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை. [36853]

## பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L வகுப்புகளுக்காக ஒவ்வொரு மாதமும் பயிற்சி வினாத்தாள்கள் [விடைகளுடன்] எம்மால் வெளியிடப்படுகின்றன. மே மாதத்திற்கான பயிற்சி வினாத்தாள்கள் 27-5-95 சனி முதல் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8557]

## ஆண்டு 5 புலமைப்பரிசில்

அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட புதிய பாடத்திட்ட மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொகையாகப் பெற விரும்புபவர்களுக்கு 25% கழிவுண்டு. Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8558]

ஆண்டு 5 புலமைப்பரிசில் 95 பரீட்சைக்காக புதிய பாடத்திட்டப்படி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு மாதத்தின் 2ஆவது 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. அடுத்த வெளியீடு: 28-5-95 பயிற்சி வினாத்தாள்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [8559]

## தேவை

கடைப் பாவனைக்குரிய றாக்கைகள், கண்ணாடியிலான சோகேஸ் (Show Case) ஆகியவை தேவை. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: விளம்பர இல 796, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். [36899]

## மிருதங்கம்

ஒரு கொட்டு தந்து முழு வேலையும் செய்ய 1000/- ரூபா. விலையில் மாற்றம் இல்லை. குறித்த தவணையில் நல்ல முறையில் செய்து தரப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் இல. 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். [36877]

## A/L மாணவர்களுக்கு

வர்த்தகமும் நிதியும் 1990–1994 வரை 1992–1991 விசேட பேப்பர் கடந்த கால வினாக்களும் விடைகளும் பொருளியல் 1990–1994 வரை 1990–1991 விசேட பேப்பர் கடந்த கால வினாக்களும் விடைகளும் ஆக்கம் E. செல்வநாயகம் (Royal College) விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக சாலை யாழ்ப்பாணம். (சி-1437)

## இறைச்சிக் கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். 54/3, சந்தன மாதா, கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (36922)

## புலமைப்பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய 04-06-95 ஞாயிறு (இன்று) வெளியிடப்படும் ஆண்டு 3, 4 வகுப்புகளிற்கு 28-05-95 ஞாயிறு வெளியிடப்பட்ட மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (36921)

## மணமக்கள் தேவை

கத்தோலிக்க படித்த வசதியுள்ள 33 வயதுப் பெண்ணுக்கும் வெளிநாட்டிலிருந்து வந்த 37, 35 வயது இந்து மக்களுக்கு பெண்களும் தேவை. மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம் (36904)

## மணமகன் தேவை

வயது 21, செவ்வாய்க் குற்றமற்ற பெண்ணுக்கு 28 வயதுக்குட்பட்ட கனடா மணமகன் தேவை. தொடர்பு: புஸ்பா திருமண சேவை, இல: 559, [341] கே. கே. எஸ். வீதி, மனோகரா தியேட்டர் சந்தி, யாழ்ப்பாணம். (36909)

## மணமகள் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற [பாவம் 34] திருவோணம் நட்சத்திரம் கொண்ட கனடாவிலிருந்து வந்தவர் 32 வயதுக்குட்பட்ட பெண்ணைக் கூட்டிச் செல்லவிரும்புகிறார். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (36906)

நட்சத்திரம் உத்தரட்டாதி செவ்வாய் குற்றமுள்ள 28 வயது கனடாவில் குடியுரிமை பெற்று தொழில் புரியும் மணமகனுக்கு அழகான பெண் தேவை. தொடர்பு: புஸ்பா திருமண சேவை 559 – 341, K. K. S வீதி, மனோகராச் சந்தி, அருகில். [36917]

## திருமணசேவை

பிள்ளைகளுக்கு திருமணம் இன்னும் ஆகவில்லையே என்ற கவலை பெற்றோருக்கு உண்டா அவரவர் குறிப்புகளுடன் பொருத்தமானவர்களைத் தெரிந்து செல்லலாம் மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். [36905]

## சனி மாற்றம்

2-6-95 சனி மாற்றமும் யோகர் சுவாமிகளின் தெய்வீக வரலாறும் ரூபா 10/- எங்கும் விற்பனையாகின்றது நூலாசிரியர்: சத்யா [கட்டுடை] பாடசாலைப் புத்தகங்கள் அலுவலக உபகரணங்களுக்கு மது புத்தகசாலை, கொக்குவில் சந்தி. [8425]


# அரை லட்சம் மக்களை சிறைப்படுத்திய இந்தியாவின் 'தடா' இறந்துவிட்டதா?

கடந்த மே 22 ஆம் திகதி ''தடா'' என்று அழைக்கப்படும் பயங்கரவாத, சீர்குலைவுவாத நடவடிக்கைகளின் தடைச் சட்டம் காலாவதியாக இந்திய அரசாங்கம் அனுமதித்தது.

1985 ஆம் ஆண்டு மே 22 ஆம் திகதி இச்சட்டம் அமுலுக்கு வந்தது.

ஒவ்வொரு இரண்டு ஆண்டிலும் நாடாளுமன்றத்தால் புதுப்பிக்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்டிருந்த இந்தச் சட்டம் ஆங்கிலத்தில் Terrorist and Disruptive Activities (Prevention) Bill என்று பெயர் சூட்டப்பட்டதிலிருந்து சுருக்கமாக ''Tada'' [தடா] என்று அழைக்கப்பட்டது.

1985 இல் டில்லியில் பல குண்டு வெடிப்புகள் சம்பந்தமாக ஐவர் கைது செய்யப்பட்டதை அடுத்தே தடாச் சட்டம் வன்முறையையும் சீர்குலைவையும் தடுப்பதற்கென்று வகுக்கப்பட்டது.

திருமதி இந்திராகாந்தியின் படுகொலை, டில்லியில் 1984 இல் ஏற்பட்ட கொலைகள், பஞ்சாப்பில் இடைவிடாது நிகழ்ந்த பயங்கரவாதம்— இவை ''தடாச்'' சட்டம் உருவாகுவதற்கு வழிவகுத்தன.

அப்பொழுது பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி தனது தாயாரின் இழப்பினால் மனங்குழம்பி இந்தச் சட்டத்தை அமைச்சரவை அங்கீகரிக்கச் செய்தார்.

சில உயர் அதிகாரிகள் இந்தச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படலாம் என்று அவரை எச்சரித்தார்கள். அவர்களுடைய கருத்தை ராஜீவ் ஒதுக்கித் தள்ளினார்.

திருமதி இந்திரா காந்தியின் படுகொலையாலும் டில்லிக் குண்டு வெடிப்புகளாலும் அதிர்ச்சியும் அச்சமும் அடைந்த சூழ்நிலையில் இந்திய நாடாளுமன்றம் கூடியது.

பொலிஸாரின் முரட்டுத்தனமான, அடாவடித்தனமான நடவடிக்கைகளால் ஏற்கனவே நசிந்து கொண்டிருக்கும் இந்திய மக்களுக்கு ''தடா'' ஏற்படுத்த இருக்கும் அபாயங்கள் பற்றி ஆற அமர யோசிக்கும் நிலைமையில் நாடாளுமன்றம் இருக்கவில்லை.

### துஷ்பிரயோகம்

தடாச் சட்டம் பெருமளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது.

அரசியல் வாதிகளின் தனிப்பட்ட கோபதாபம் காரணமாக அப்பாவிகள் பிடித்து அடைக்கப்பட்டார்கள்.

பல இடங்களில் பொலிஸார் தடாவைப் பயன்படுத்தி, மனிதத்துவம், சமத்துவம், சுதந்திரம், நீதி ஆகியவற்றைக் காலின் போட்டு மிதித்துள்ளனர்.

தடா சட்டம் உருவாகுவதற்கு உடனடிக் காரணமாக இருந்த குண்டு வெடிப்புகள் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட ஐவர் தடா நீதிமன்றங்களைக் கூடச் சென்றடையவில்லை. ஐந்து பேரும் ''தற்கொலை'' செய்து கொண்டார்கள்.

துப்பாக்கியால் ஜனநாயகத்தைக் கொல்பவர்களைச் சமாளிப்பதற்கு என்று உருவாக்கப்பட்ட'' தடா'' சட்டத்தின் முதல் பலியாட்கள் இந்த ஐவரும் ஆவர். பின்னர் பலர் பொலிஸ் காவலில் இருந்த போது இறந்துள்ளார்கள்.

பயங்கரவாதம் அவ்வளவுக்கு இல்லாத குஜராத் மாநிலத்திலேயே சுமார் 1,500 பேர் தடாவின்கீழ் கைதுசெய்யப்பட்டனர். இந்தக் கைது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையே ஆகும். மற்ற மாநிலங்களிலும் இப்படியே.

பயங்கரவாதத்தை சமாளிப்பது ஒரு விஷயம். ஆனால் அதன் பெயரில் ஆயிரம் ஆயிரம் அப்பாவிகளைக் கைதுசெய்வது இன்னொரு விஷயம்.

### ஆக்கிரமிப்பாளனாக அரசாங்கம்

கடந்த 10 ஆண்டுகளில் தடா சட்டத்தின்கீழ் இந்தியாவில் அரசாங்கம் மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பாளனாகச் செயற்பட்டுள்ளது.

இந்த நிலைமையில் சுதந்திரம் பற்றிய அரசமைப்பிலான உத்தரவாதம் காற்றில் பறந்தது.

இந்திய அரசமைப்பின் 20 ஆவது சரத்தில் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ள அடிப்படைச் சுதந்திரத்தை தடா நிராகரிக்கின்றது.

சரத்து 20 கூறுவதாவது: ''ஏதாவது குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவர் தனக்கு எதிராகச் சாட்சியம் அளிக்க நிர்ப்பந்திக்கப் படக் கூடாது.''

குற்ற ஒப்புதல் செய்யப்படும் போது பொலிஸ் அதிகாரி நிர்ப்பந்திக்கவில்லை என்பது எப்படி உத்தரவாதம் ஆகும்.

பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு முன்னர் செய்யப்படும் குற்ற ஒப்புதலை, சுயவிருப்பமானது, சந்தேகத்துக்கு அப்பாற்பட்டது என்று எந்த நாகரிகமான ஜனநாயக சிந்தை படைத்தவரும் கூற மாட்டார்.

அதிகாரம் பெறாது ஆயுதங்களை வைத்திருப்பது பற்றிய ''தடா'' சரத்து இன்னும் மோசமானது.

ஆயுதங்களை ஒருவர் வைத்திருந்தாலே தடா சட்டத்தின் கீழ் அவர் பயங்கரவாதியாகக் கணிக்கப்படுகின்றார். பிரபல நடிகர் சஞ்சய்தத் இதற்கு ஓர் உதாரணம் அவரிடம் 3 றைபிள்கள் 3 நாட்களாக இருந்தன. பின்னர் இரண்டு திருப்பிக் கொடுக்கப்பட்டன. ஒன்றை மட்டும் வைத்திருந்தார்.

இப்பொழுது சஞ்சய்தத் 10 மாதங்களுக்கு மேலாக சிறையில் வாடுகின்றார்.

### தடா அட்டூழியங்கள்

தடா சட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. 'தடா' சட்டத்தின் கீழ் பிணை மறுக்கப்பட்டுள்ளது. இரகசியமாக விசாரணைகள் நடத்தப்படலாம். அப்பாவிகளான எதிரிகளுக்கு நீதி வழங்கப்படுவதில்லை.

இந்திய அரசாங்கமே இப்பொழுது இதை ஒப்புக் கொண்டுள்ளது.

இச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களைக் குறிப்பிட்ட காலத்தில் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லத் தேவையில்லை; உற்றார் உறவினருக்கு அவரைப் பற்றி அறிவிக்கத் தேவையில்லை. தடா சட்டத்தின் கீழ் பெரும்பாலும் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த 54 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குகள் உள்ளன. சென்ற வருடத்தில் இச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 17 ஆயிரம் பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

### கண்டனங்கள்

மனித உரிமைகள் குழுக்களின் பலத்த கண்டனங்களுக்குள்ளாகியது தடா சட்டம். அவை இச் சட்டத்தை இல்லாது செய்ய வேண்டும் என்று கோரின.

பிணையில் விடுதலை செய்யாமல் காலவரையறையின்றி தடுத்து வைத்திருப்பது, தேசிய விரோதச் சக்திகளுடன் தொடர்பு உடையவர்கள் எனச் சந்தேகித்து கைது செய்யப்படுவது ஆகியன உட்பட இச் சட்டம் துஷ்பிரயோகம்செய்யப்பட்டுள்ளது என்று மனித உரிமைகள் குழுக்கள் தெரிவித்தன.

இனக் கலவரங்களின் போது ''தடா'' சட்டத்தின் கீழ் மக்கள் கண்டபடி கைது செய்யப்பட்டார்கள்.

காஷ்மீர், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காலவரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

'தடா' சட்டம் வருவதற்கு முன்னர் 1984ஆம் ஆண்டில் சிறப்பு நீதிமன்றங்கள் சட்டம் நடைமுறையில் இருந்தது. இந்த சிறப்பு நீதிமன்றங்கள் சகல மாநிலங்களிலும் இருக்கவில்லை. பிரிவினை கோஷங்கள் மூலம் வன்முறைகள் உருவாக்கப்பட்ட மாநிலங்களில் மாத்திரமே இருந்தன.

கைதுசெய்யப்பட்ட ஒருவர் இந்த மன்றங்களில் மட்டுமே பிணையில் செல்ல விண்ணப்பிக்கலாம்.

''தடா'' சிறப்பு நீதி மன்றம், உச்ச நீதி மன்றம் இரண்டிற்கு மட்டுமே ஒரு பிணைக்கான விண்ணப்ப மனுவைச் சமர்ப்பிக்கலாம். அவற்றைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் அதிகாரம் இந்த இரண்டு நீதிமன்றங்களுக்கே உள்ளது.

''தடா'' சிறப்பு நீதிமன்றங்கள் அவற்றின் பதவிக்காலம் முடிந்த பின்னரும் முடிக்கப்படாத வழக்குகளை விசாரித்து தீர்ப்பு அளிக்க வேண்டும் என்பதும் சட்டத்தின் ஒரு சரத்து ஆகும்.

தடா சட்டம் 22 மாநிலங்களிலும் 2 யூனியன் பிரதேசங்களிலும் அமுல் செய்யப்பட்டது. 1987, 89, 91, 93 ஆண்டுகளில் சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால் அதன் அடிப்படை தளராமல் இருந்துள்ளது.

### தயாராகிறது புதியசட்டம்

காலாவதியான தடா சட்டத்தின் இடத்தில் இன்னொரு சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இன்னமும் அது நடைபெறவில்லை.

இது பற்றிய அரசாங்க யோசனைகளைப் பொறுத்து கருத்துத் தெரிவித்த பலர், புதிய சட்டம் ''தடா'' சட்டத்தை விடக் கொடியதாக அமையும் என்று அச்சத்தைத் தெரிவித்துள்ளனர்.

''தடா'' சட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை புதுப்பிக்க வேண்டியிருந்தது. புதிய சட்டத்துக்கு அது கூடத் தேவையில்லாமல் இருக்கும் என்று அவர்கள் கூறினார்கள்.

எது எப்படியிருப்பினும், இந்தியா சுதந்திரம் அடைந்தது முதல், ஏதோ ஒரு விசேஷ சட்டத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதையே பிரபல அரசியல் விமர்சகரான குஷ்வந் சிங் ''தடா எமது ஒரு பழக்கமாகியுள்ளது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

- பாரதிநேசன் -

★


## தனியார் தொழிற் பயிற்சிக் கல்லூரிகளின் ஒன்றியம் யாழ் மாவட்டம்

மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு ஜூன் 6ஆம் திகதி விடுமுறை நாள் என்பதை சகல தனியார் தொழிற் பயிற்சிக் கல்லூரிகளுக்கும் அறியத் தருகின்றேன்.

-செயலாளர்

(சி/1651)

## தாதியர் பயிற்சி நெறி
## DIPLOMA IN NURSING

10 – 6 – 95 இல் ஆரம்பமாகின்றது

1. தமிழீழத்தின் தனியார் துறை தாதியப்பயிற்சியின் ஆரம்ப கர்த்தாவும், வேலூர் தாதியப் பயிற்சியில் 30 வருட கால அனுபவம் உடையவரும், தாதியர் போதனாசிரியராக 12 வருட கால அனுபவம் உள்ளவருமான கலாநிதி V. P. சுந்தரராஜன் அவர்களால் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
2. கல்வித் தகைமை:– க. பொ. த. (சாதாரணம்).
3. விசேட மருந்தியல் பாடம் உட்பட, குழந்தைப் பராமரிப்பு, மருத்துவ உளவியல், குழந்தை உளவியல் ஆகிய பாடங்களும் உள்ளடக்கப்பட்டன.
4. நகரின் பிரபல வைத்தியசாலையில் இரண்டு மாத கால செய்முறைப் பயிற்சிகள்.
5. போராளிகள், மாவீரர் குடும்பத்தவர்களுக்கு இலவச கல்வி.

விவரங்களுக்கு:–

## சாயி மருத்துவக் கல்லூரி

இல. 10, இல 6, பருத்தித்துறை வீதி, யாழ் நகர் — தமிழீழம்.

(சி- 1890)

உ
சிவமயம்

## இந்து சமயப் பேரவை யாழ்ப்பாணம்
## கண்டன நடவடிக்கை சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம்

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
காலம்: 04-06 1995 ஞாயிறு மு. ப. 9-00மணி
தலைவர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

இந்துக் கோயில்கள் மீதான இராணுவத் தாக்குதல்கள் சேதமடைந்த இந்து ஆலயங்களைப் புனரமைப்பதில்/நஷ்டஈடு வழங்குவதில் அசமந்தப் போக்கு வரலாற்றுப் பெருமை மிக்க இந்துக் கோயில்களின் புனிதத்தைக் கெடுக்கும் வகையில் இராணுவ முகாம்கள் அமைப்பு, பூசைகளுக்குத் தடை, இந்து ஆலயங்களுக்கு அருகில் விகாரைகள் அமைப்பு, இந்து ஆலயக்காணிகள் பறிமுதல் ஆகிய அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிரான கண்டன நடவடிக்கை பற்றி ஆராயப்படும்.

இந்துக் குருமார்கள் இந்து சமயப் பேரவை உறுப்பினர்கள், இந்து சமயச் சங்கங்கள்/சபைகள், அறங்காவலர் சபைகள்/ஆலய பரிபாலன சபைகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், இந்து சமய அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நா முத்தையா
தலைவர்

சி. சக்[illegible]
கௌரவ செயலாளர்

(சி/1[illegible])


# ஸ்ரீலங்கா இராணுவத்தை....

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூற்று.

### உயிரிழக்கும் சிப்பாய் குறித்து அரசின் கவலை

போர் தீவிரமடைய நாளாந்தம் குறைந்தது ஏழு அல்லது எட்டுச் சிப்பாய்கள் இறக்க நேரிடுகிறது. இவ்வாறு இறப்பவர்கள் குறித்து அரசாங்கமும் இராணுவமும் காட்டும் அக்கறை ஏனைய சிப்பாய்களுக்கு இராணுவ சேவையில் வெறுப்பைத் தோற்றுவிக்கின்றது என்பதிலிருந்து நிலைமை எவ்வளவு தூரம் கவலைக்கிடமாயுள்ளது என்பது தெளிவு.

கடந்த வாரம் ஆனையிறவு முன்னணிக் காவல் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்ட போது கொல்லப்பட்ட சிப்பாயின் சடலம் அவரது கிராமத்திற்குக் கொண்டு செல்லப்பட்டபோது, அவரது சடலம் சுமார் 3 மணித்தியாலங்கள் வீட்டிற்கு வெளியே வைக்கப்பட்டது. இதற்குக் காரணம் அவரது வீட்டில் அவரது சடலத்தை வைக்கக்கூட இடமில்லை. தற்காலிக கொட்டில் ஒன்று போடும்வரை அவரது உடல் வெளியே வைக்கப்பட்டிருந்தது. அந்த இளைஞர் இராணுவத்தில் அண்மையிலேயே சேர்ந்தார். இதனால் அவரது வீட்டிலுள்ள அடிப்படைத் தேவைகளைக் கூட அவரால் கவனிக்க முடியாதிருந்தது. தற்காலிக கொட்டில் அமைத்து முடிந்ததும் அதற்குள் அவரது சடலத்தை வைத்த பின்னர் இறுதிச் சடங்கு நடக்கும் நாளன்று இறுதி மரியாதை செலுத்த வருவதாக இராணுவ அதிகாரிகள் கூறிச் சென்றனர். இறுதிச் சடங்கு வரையான செலவுகளுக்கு அவரது வயதான பெற்றோரிடமோ வேலையற்றிருக்கும் சகோதரியிடமோ பணம் இருக்கவில்லை.

மரணமான தனது மகனின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் கிடைக்கலாம் என்ற நோக்கில் தந்தை பொலிஸ் நிலையம் சென்றார். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முடிந்தளவு உதவிகளைச் செய்தார். இறுதிச் சடங்கு நடைபெற்ற வேளை சமூகமளித்தலைத் தவிர அதற்கு முன்னர் இடம் பெற்ற செலவுகள் பற்றியோ ஒழுங்குகள் பற்றியோ அந்தச் சிப்பாய் பணியாற்றிய றெஜிமென்டோ இராணுவத்தின் வேறு பிரிவுகளோ அக்கறை கொள்ளவில்லை.

போர் மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் உள்ள இராணுவ முகாம்களுக்கு நாங்கள் சென்றிருந்த போது, இராணுவத்தினர் ஏன் தப்பி ஓடுகின்றனர் என்பதற்கான காரணங்களை எங்களால் கண்டறிய முடிந்தது.

சிகரட்டிற்காக சம்பளத்திலிருந்து பணம் கழிக்கப்பட்ட போதிலும் கடந்த 4 மாதங்களாக சிகரட் வழங்கப்படவில்லை என திருகோணமலையில் ஒரு சிப்பாய் தெரிவித்தார். உரிய முறையில் சிறுடைகள் கூடக் கிடைப்பதில்லையாம். வெற்றிலைக்கேணிப் பகுதியிலுள்ள 2000 படைவீரர்களில் 85 வீதமானோர் கிடுகுக் கொட்டில்களில் தங்கியுள்ளனர். ஏனோதானோ என அமைக்கப்பட்ட காப்பகழிகளில் படுப்பதற்கு சீரான ஒரு பாய்கூட இல்லாமல் பணிபுரிகின்றனர். இவர்கள் பச்சைத் தென்னோலைகளைப் பின்னி ஒருவாறு கொட்டில்களை வேய்ந்து மழையிலிருந்தும் தப்பிக் கொள்கின்றனர்.

### முல்லைத்தீவு முகாமின் நிலை

முல்லைத்தீவு முகாமில் உரிய கட்டட வசதிகளைபோயின் பிறப்பாக்கிகளையோ காண முடியவில்லை. கூரைகள் இடிந்து, சேதமுற்ற பல கட்டடங்களே அவர்களது முகாமாகும். போக்குவரத்திற்கு உரிய வாகனமெதுவுமில்லை. தொப்பிகலை இராணுவ முகாமிலுள்ள சமிக்ஞைப் பகுதி களி மண்ணினால் அமைக்கப்பட்டுள்ளது. படையினர் தங்குமிடம் கிழிந்த தறப்பாள் துணியினால் அமைக்கப்பட்டுள்ளது. மீன், இறைச்சி, மரக்கறி ஆகியனவற்றை பழுதடையாமல் வைக்கப் பயன்பட்ட குளிர்சாதனப் பெட்டியும் தற்போது செயலிழந்துள்ளது.

### அதிகாரிகளுக்கு சொகுசு விடுதிகள்

நிலைமைகள் இவ்வாறு இருக்கையில் திருகோணமலை, மட்டக்களப்பு, மொறவெவ, ஆனையிறவு, பூநகரி, பலாலி ஆகிய இடங்களிலுள்ள அதிகாரிகளின் விடுதிகள் சொகுசுபடுத்தப்பட்டுள்ளன. உயர்தர உணவு மற்றும் குடிவகைகளுக்கோ குறைச்சலில்லை.

இவ்வாறான முரண்பாடுகள் போர்க் களங்களில் தெளிவாகத் தெரிவதும் சிப்பாய்கள் இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடுவதற்கு ஒரு காரணமாகும்.

அதிகாரிகளாக மத்தியதர வகுப்பினரும் உயர்வர்க்கத்தைச் சேர்ந்தோருமே தெரிவு செய்யப்படுகின்றனர்.

பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த — கஷ்டப்பட்ட — கல்வி அறிவுபெறாத — குடும்பங்களைச் சேர்ந்தோரே பெரும் பாலும் சிப்பாய்களாகத் தெரிவு செய்யப்படுகிறார்கள். இத்தகைய சமுதாய இடைவெளி காரணமாக உருவாகும் அழுத்தங்கள், கவனிப்பாரற்ற தன்மை ஆகியனவும் இராணுவத்தினர் தப்பியோடக் காரணங்களாக அமைகின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பகிடிக்கும் வதை வேண்டாம்

எத்தனை தடவைகள் இந்தப் பத்தியில் திரும்பத் திரும்ப வலியுறுத்தியும் அது தமது சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் 'செவிடன் காதில் ஊதிய சங்கு' ஆகிய நிலையில் மீண்டும் அதே விடயத்தை வலியுறுத்த வேண்டிய — கவலையான நிலையில் — அது பற்றி மீண்டும் இன்று எழுதுகிறோம்.

ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் புதிதாக அனுமதிக்கப்படும் போது பல்கலைக்கழகத்தில் இருக்கும் ஒரு பகுதி "அதிமேதாவிகள்" றாகிங் (பகிடிவதை) என்ற சமூக விரோதக் குற்றத்தை மாணவர் சமுதாயத்தின் மீது கட்டவிழ்த்து விடுவதும் —

பல்கலைக்கழக நிர்வாகம் தன்னால் இயன்றவரை பகிடிவதைக்கு எதிராக தன் அதிகாரத்தைப் பிரயோகிப்பதும் —

ஆனால் அவற்றுக்கு மசியாமல் — கட்டுப்படாமல் — சமூக விரோதிகள் 'றாகிங்' என்ற போர்வையில் அடாவடித்தனம் பண்ணுவதும் —

அதனைத் தடுத்து—சமூக சீர்கேட்டை ஒழித்து—சமூகத்தை நேரிய வழியில் இயக்கச் செய்ய வேண்டியவர்கள் இது விடயத்தில் இயங்காமல் இருப்பதும் —

கடந்த பல ஆண்டுகளாக இடம்பெற்று வரும் யதார்த்தங்களாகும்.

இந்தத் தடவை இப்பிரச்சினை புதிய வடிவம் எடுத்திருக்கிறது.

'றாகிங்' பற்றியோ, இங்கு அதனைப் புரிபவர்கள் செய்யும் மிகமிகக்கீழ்த்தரமான— அநாகரிகமான — செயல்கள் குறித்தோ மீண்டும் மீண்டும் விலாவாரியாக எழுதுவது அவசியமற்றது.

ஏனெனில் —

விடுதலைக்காகப் போராடும் ஒரு மண்ணில்—

பெண்களை இழிவுபடுத்தல், லஞ்சம், மோசடி, கொள்ளை போன்ற சமூகசீர் கேடுகள் பெருமளவு ஒழிக்கப்பட்ட ஒரு பூமியில் —

தாயின் விடுதலைக்காக தங்கள் இன்னுயிரையே ஈகம் செய்யும் தியாகசீலர்களின் நெறிப்படுத்தலிலே இயங்கும் ஒரு சமூகத்தில்—

"பகிடிவதை" என்ற சமூகச் சீர்கேடு கிஞ்சிற்றேனும் பொறுத்துக்கொள்ளக் கூடியதல்ல.

அதனை சம்பந்தப்பட்ட "அதிமேதாவிகளுக்கு" புரிய வைத்து அவர்களைத் திருந்தச் செய்ய வேண்டும். புரிந்தும் திருந்த மறுப்பவர்களை சட்டமுறையில் தண்டித்துத் திருத்த வேண்டும்.

ஆனால் அதற்காக, மற்றவர் கண்ணில் படாமல் —

இரவில் மறைந்து பெயர் குறிப்பிடாத அநாமதேய "போஸ்டர்களை" ஒட்டுவதோ அல்லது அத்தகைய "போஸ்டர்கள்" மூலம் சம்பந்தப்பட்ட "அதிமேதாவிகளை" மிரட்டுவதோ "றாகிங்"கை தடுப்பதற்கு உரிய வழிமுறை அல்ல; அது ஏற்றுக் கொள்ளக் கூடிய செயல்முறையும் அல்ல.

சமுதாயச் சீர்கேட்டைத் தடுப்பதற்கு உரியவர்கள் தவறியதால்— அதனால் பாதிப்புற்றோர் வேறு வழியின்றி— இத்தகைய குறுக்கு வழியை நாடும் நிலை ஏற்பட்டிருக்கலாம் என்று வேண்டுமானால் கருதலாம். ஆனால் அது பயன் தரும் வழியல்ல என்பதேபொதுவான கருத்து. பாதிப்புற்ற ஒவ்வொருவரும் இவ்வாறு தாமே சட்டத்தைப் பிரகடனப்படுத்தும் வழியை நாடினால் சமூகத்தின் கதி என்னாகும்?

சமூகத்தின் எந்த அங்கமும் இத்தகைய வழியை நாடாத வகையில் சமூகம் வழி நடத்தப்பட வேண்டும்.

உரியவர்கள் சிந்தித்து அவசரமாக — அவசியமாக நடவடிக்கை எடுப்பார்களா?

எங்கள் விடுதலையை, பாரம்பரிய கலாசாரத்தை, பண்பாட்டை, கலைகளை, வாழ்க்கை முறைகளை மீள்வித்துப் புத்துயிர் கொடுக்க முனைப்புடன் பணிகள் நடைபெற்று வரும் வேளையில் —

"றாகிங்" போன்ற அநாகரிக நிகழ்வுகள் எங்கள் மண்ணுக்கும் மக்களுக்கும் அவமானத்தைத் தேடித் தருமாக எதிர்க்கும் என்பதனை இடித்துரைக்க விரும்புகிறோம்.

# தமிழர் விடுதலை போராட்டத்துக்கு வித்திட்ட ஜூன்-5

# நாற்பது வருட காலத்தில் மிகத் துரித முன்னேற்றம்

நாளை ஜூன் மாதம் ஐந்தாம் திகதி. ஈழத் தமிழர்களை ஸ்ரீலங்காவின் இரண்டாந்தரப் பிரசைகளாக்குவதற்காக, சிங்கள-பௌத்த பேரினவாதம் வெளிப்படையாக, உத்தியோக பூர்வமாகச் செயற்பட்ட நாள் ஜூன் ஐந்தாம் திகதி. அந்த நாள் ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் என்றுமே மறக்க முடியாத நாள்.

அந்த நாளை எப்படி மறக்க முடியும்? பிரிட்டிஷாரிடம் இருந்து தமிழர்கள் சுதந்திரம் பெறவில்லை. அவர்களின் இடத்தை சிங்களவர்கள் பிடித்துக் கொள்ள முயல்கிறார்கள் என்பதனை தமிழர்களுக்குச் சிங்களத் தலைவர்கள் பகிரங்கப்படுத்திய நாள் அதுவல்லவா?

ஆம். ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்களம் ஆட்சி மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் திகதியே ஆகும். "சிங்களம் மட்டும்" சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது அன்றைய தினமே.

சிங்களவர்களை அரச எஜமானர்களாக ஏற்பதற்குத் தயாரில்லை என்பதனைத் தமிழ் மக்கள் துணிச்சலுடன் எடுத்துக்காட்டியதும் அன்றைய தினமே. சிங்கள மக்களுடன் வேண்டுமானால் சம அந்தஸ்துள்ள பிரசைகளாக வாழ்வோமே அன்றி, அவர்கள் ஆளும் இனமாகவும், நாம் ஆளப்படும் இனமாகவும்— இரண்டாந்தரப் பிரசைகளாக— வாழத் தயாரில்லை என்று தமிழர்கள் எடுத்துக்காட்டியதும் 1956 ஜூன் 5ஆம் நாளிலேயாகும்!

தமிழர்கள் தங்கள் சுதந்திரத்துக்காகப் போராடத் தயங்கமாட்டார்கள் என்பதனைச் சிங்களவர்களுக்கு மட்டுமன்றி, உலக மக்களுக்

### அரசியல்

கும் உணர்த்தும் வகையில், அன்றைய தினம், தந்தை செல்வா தலைமையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஏனைய ஆதரவாளர்கள் பலரும் அப்போதைய நாடாளுமன்றத்துக்கு எதிரே— காலிமுகத் திடலில்— சத்தியாக்கிரகம் இருந்தனர்.

சிங்களக் குண்டர்களை ஏவி, சத்தியாக்கிரகிகள் மீது கல் எறிவித்த சந்திரிகாவின் பாசத் தந்தையார் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, இரத்தம் தோய்ந்த நிலையில் நாடாளுமன்றத்துக்கு சென்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பார்த்து 'வீரர்களின் விழுப்புண்' என்று நையாண்டி செய்தார்!

நாற்பது வருடங்களின் பின்னர்.....

தமிழர்கள் தமது விடுதலைக்காக அன்று சிந்தத் தொடங்கிய இரத்தம் சுமார் நாற்பது வருடங்களாகியும் இன்னும் நிற்கவில்லை. தமிழர்களின் கடந்த நாற்பது வருட காலப் போராட்டம் பல திருப்பங்களையும் நினைத்துப் பார்க்காத மாறுதல்களையும், சாதனைகளையும் கண்டு இன்று சுதந்திரத்தைக் காண்பதற்கான மொட்டவிழ் நிலையில் உள்ளமை, உண்மையில் மெய் சிலிர்க்க வைப்பதும், அதே வேளை பெருமைக்குரியதும் ஆகும்.

மெய்சிலிர்ப்பும், பெருமையும் ஏன் என்பதனைச் சற்று விரிவாக நோக்குவது பொருத்தமாகும்.

1956 ஜூன் 5 ஆம் திகதி காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகம் செய்த தமிழர்கள் மீது சிங்களக் குண்டர்கள் கல் எறிந்து காயப்படுத்திய போது—

1958 ஒகஸ்டில் தெற்கில் சிங்கள—பௌத்த பேரினவாதிகளின் இனவெறி தலைவிரித்தாடி, தமிழர்களைக் கண்ட துண்டமாக வெட்டியும், கொத்தியும் எரித்தும், படுகொலை செய்தும், அங்குள்ள தமிழர்களின் உடைமைகளைச் சூறையாடியும் நாசம் செய்தும் அங்கிருந்து விரட்டியடித்த போதும்—

உடுத்த உடைகளுடனும், சாப்பாட்டுத் தட்டுகளுடனும் தமிழர்கள் வடக்கு—கிழக்குக்குக் கப்பல்களில் வந்து சேர்ந்த போதும்—

அதன் பின்னர் 1961 இல் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் மீது இராணுவம் ஏவிவிடப்பட்ட போதும்—

அதன் பின்னர், வடக்கிலும் கிழக்கிலும் ஒரே தொடர்ச்சியாக இராணுவ ஆதிக்கத்தின் அட்டூழியம் கோரத் தாண்டவமாடிய போதும்—

கனவு தானும் கண்டதுண்டா?

சிங்களவர்களின் வன்முறைக்கு வன்முறையால் பதிலடி கொடுக்க முடியும் என்றோ, ஆயுதபலம் பொருந்திய ஸ்ரீலங்கா இராணுவ அடக்குமுறைக்கு "நெற்றியடி" கொடுக்கும் காலம் வரும் என்றோ தமிழர்கள் கனவு தானும் கண்டதுண்டா?

1983 ஜூலை 23 ஆம் திகதி திருநெல்வேலியில் 18 இராணுவச் சிப்பாய்கள் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் உயிரிழந்ததற்காக, தென்னிலங்கையில், ஆட்சியில் இருந்த ஜே. ஆரும், இராணுவமும் உலகமே பழித்துரைக்கும் அளவுக்கு திட்டமிட்டு நடத்திய தமிழர் இனப்படுகொலையின் போது—

தமிழர் பிரதேசத்தில் ஸ்ரீலங்காவின் தரை, கடல், வான் படைகளுக்குச் சிம்மசொப்பனமாக விளங்க வல்ல பலமுள்ள முப்படைகளும் உருவாகும் என்று எந்தத் தமிழனும் நினைத்துப் பார்த்ததும் உண்டா?

ஸ்ரீலங்காப் படையின் விமானங்களைச் சுட்டு வீழ்த்தி அகில உலகத்தையும் வியப்பில் ஆழ்த்தும் சம்பவங்கள் நிகழும் என்று எவரும் 1983 ஜூலையில் கற்பனை செய்தது உண்டா?

ஸ்ரீலங்கா அரசுகளின் இராணுவப் படைகளின் பலத்துக்குச் சமமாக நாம் எம்மை வளர்த்தால், தமிழர்களுக்கு இத்தகைய அழிவுகள் ஏற்பட மாட்டா. குட்டக் குட்டத்

## தமிழீழம் உருவாகுவதை தடுக்கவே சந்திரிகா பூணுகிறார் போர்க்கோலம்

தமிழன் குனிவான் என்று சிங்களவன் எண்ணுவதைத் தடுப்பதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் — என்று கறுப்பு ஜூலையின் போது கொழும்பின் அகதிமுகாம்களில் இருந்த சிலர் மனதில் அங்கலாய்ப்பு ஏற்பட்டிருக்கக் கூடும்.

எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்களால் அது சாத்தியம என்று அடுத்த கணமே அவர்கள் மனங்களில் தாழ்வு மனப்பான்மை வந்திருக்கும்!

### காலம் மாறிவிட்டது

இப்போது ? ஸ்ரீலங்காவின் முப்படைகளையும் சேர்ந்த சிப்பாய்கள் தமிழர்களின் — விடுதலைப் புலிகளின் — இராணுவ பலம் கண்டு உயிருக்கு அஞ்சி படைகளை விட்டுத் தப்பி ஓடுவதைக் காணமுடிகிறது எவ்வளவு மாற்றம். சிங்களவர்களுக்குத் தமிழர் அஞ்சிய காலம் மாறி, தமிழர்களுக்கு சிங்களப் படைகளே அஞ்சும் காலம் வந்திருக்கிறது! காலம் முற்றிலுமாக மறுவளமாக மாறிவிட்டது!

ஆரம்பத்தில் குறிப்பிட்ட 1956 ஜூன் 5ஆம் திகதிக்கும் 1995 ஜூன் 5ஆம் திகதிக்கும் இடையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் இத்துணை வளர்ச்சி கண்டிருக்கிறதே என்று நினைக்கும் போது மெய்சிலிர்க்காதவன், பெருமைப்படாதவன் உண்மையான தமிழனாக இருக்க முடியாது!

1956 ஜூன் 5இல் தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கு வித்திடப்பட்டது என்று கூறின் பொருத்தமற்றதாகாது. இதனை அன்றைய சிங்களத் தலைவர்களில் ஒருவரான கொல்வின் ஆர். டி. சில்வா —

இரண்டு மொழிகள் ஒரு நாடு; ஒரு மொழி இரண்டு நாடுகள் — என்று சரியாகக் கூறியிருந்தார். (இவர் அரசாங்க அமைச்சரானதும் 1978 குடியரசு அரசமைப்பு மூலம் தமிழர் உரிமைகளைப் பறித்தது வேறு கதை!)

தமது தந்தையார் கொண்டு வந்த தனிச் சிங்களச் சட்டம் இலங்கையை ஸ்ரீலங்கா என்றும் தமிழீழம் என்றும் இரண்டு நாடுகளாக பிரிந்து விடும் தறுவாயை உருவாக்கியதை நன்றாக உணர்ந்து கொண்ட (முழுக்க முழுக்க தமது தந்தையினதும் தாயினதும் பேரினவாத இரத்தம் ஓடும்) சந்திரிகா —

அதனை எப்பாடு பட்டும் தடுத்துவிடும் நோக்குடன் தான் அரியாசனம் ஏறினார். என்று கருதுவதில் தப்பில்லை.

வந்த புதிதில் சமாதான வழியில் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக பாசாங்கு செய்தார் அவர். ஆனால் தமிழர்களின் தனிநாடு உருவாக்கும் எண்ணத்துக்கு தடைபோடும் விதத்தில் ஒரு தீர்வைத் திணித்துவிட வேண்டும் என்பதே அவரது உள்நோக்கமாக இருந்தது. இப்போது அந்த நோக்கம் மிகத் தெளிவாகத் தெரிகிறது.

### மாமனும் மருமகளும்

அவர் சமாதானப் பேச்சு வார்த்தையை சில்லறையாக நடத்திய விதம் நியாயமான தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதில் அவருக்கு நாட்டமில்லை என்பதனை துலாம்பரமாக எடுத்துக் காட்டியது. தமிழர்களின் உரிமைகளை வழங்குவதிலும், அவர்களின் கஷ்டங்களைத் தீர்ப்பதிலும் இருந்த அக்கறையை விட, இராணுவத்தின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதிலேயே அதிக கவனம் செலுத்தினார். அவரது மாமன் அனுருத்த ரத்வத்தவைக் கொண்டு போருக்கான ஆயத்தங்களைச் செய்வித்தார். சமாதானப் பேச்சு நடக்கும் போதே படைகளை உஷார் படுத்துவது என்றால் போருக்குத் தயாராகுவது அன்றி வேறென்ன?

தலைவர் பிரபாகரன் இரண்டு தடவைகள் வழங்கிய காலக்கெடுக்களைப் பொருட்படுத்தாமல் அரசு அசட்டைத் தனம் காட்டிய போதே, சந்திரிகாவின் போக்கில் மாற்றத்தைக் காண முடிந்தது. சமாதானக் கூத்துக் போட்ட வேடம் கலையத் தொடங்கியது. அதனைத் தலைவர் மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தார்.

தமது தகப்பன், தாய் தமிழ்த் தலைவர்களை ஏமாற்றியது போல, அல்லது அரசியல் கண்ணாமூச்சி ஆடியது போல தலைவர் பிரபாகரனையும் ஏமாற்ற முடியும் என்று சந்திரிகா தப்புக் கணக்குப் போட்டு விட்டார். அந்தத் தப்புக் கணக்கின் விளைவை அவர் அறுவடை செய்ய நேரிடும். என்பது இயற்கையின் விதி. அது ஒருபுறமிருக்க. —

### வெளிநாடுகளின் முயற்சி கைகூடவில்லை

சமாதானத்தை உண்டாக்குவதிலோ, இனப்பிரச்சினைக்கு நியாயமான — தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய — ஒரு தீர்வை முன்வைப்பதிலோ சந்திரிகாவுக்கு நாட்டமில்லை என்பது இப்போது நாற்றுக்கு நூறு நிரூபணமாகி விட்டது.

சமாதானப் பேச்சுக்களைத் தொடங்கும் விருப்பம் சந்திரிகா அரசுக்கு இல்லை என்பதனை அவுஸ்திரேலியா, கனடா நாட்டு அமைச்சர்கள் நன்கு புரிந்து கொண்டார்கள்.

அதனாலேயே மே மாதம் 22 ஆம் திகதி கொழும்பு வந்து 24 மணித்தியாலங்கள் தங்கியிருந்த ஆஸ்திரேலிய வெளிவிவகார இணை அமைச்சர் கரட் இவான் வெகு சாதுரியமாக நழுவிக் கொண்டார். இதில் பிடிபட விரும்பாமல், இரு தரப்பும் (அரசாங்கமும், விடுதலைப் புலிகளும்) மத்தியஸ்தம் செய்யுமாறு கேட்டால் தமது அரசு அதற்கான பணியில் இறங்கும் என்று கூறிப் போனார் அவர்.

மீண்டும் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதில் அரசுக்கு விருப்பமில்லை என்பதனை அறிந்தே ஆஸ்திரேலிய அமைச்சர் அவ்வாறு தெரிவித்தார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

கொழும்பில் மூன்று நாள்கள் தங்கியிருந்த கனடா நாட்டு வெளியுறவு இணை அமைச்சர் ரேமன்ட் சானும், சந்திரிகா அரசு போர் நடத்தி விடுதலைப் புலிகளை ஒழிக்கும் வழியிலேயே அக்கறை கொண்டிருப்பதை பார்த்து விட்டு வந்த வழியே திரும்பிவிட்டார்!

### இராணுவத்துக்கு கீழ்ப்படும் தலைமைத்துவம்

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க உதவ வேண்டும் என்ற நோக்குடனேயே கனேடிய அமைச்சர் இங்கு வந்தார். அரசாங்கத்திடம் இருந்து சாதகமான பதில் கிடைத்தால் விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களின் நிலைப்பாட்டை அறிவதற்கான மார்க்கம் தமக்கு உண்டு என்பதனையும் அவர் வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

ஆனால் அரசு போரிலேயே தீவிர கவனம் செலுத்துவது கண்டு தமது முயற்சியைத் தொடங்காமல் திரும்பிச் சென்று விட்டார்.

கொழும்பில் உள்ள அரசியல் அவதானிகள் தெரிவிப்பது போல புதிய அரசின் அரசியல் தலைமைத்துவம் இராணுவப் போர் வீரனின் நடைமுறைக்கு கீழ்ப்படுத்தப்படும் ஓர் ஆபத்தான சிந்தனை அந்த தோற்றம் கொள்கிறது.

அதனால் ஜனாதிபதியே போர்க்களத்துக்கு வர வேண்டும்; துப்பாக்கி தூக்கிச் சமர் புரிய வேண்டும் என்ற கோரிக்கை கூட அங்கு எழலாம் எனச் சுட்டிக்காட்டப் படுகிறது.

இத்தகைய சூழ்நிலையில், சமாதானப் பேச்சாவது மண்ணாங் கட்டியாவது; புலிகளை ஒரு கை பார்த்துவிட்டுத் தான் மிகுதி எல்லாம்; என்ற அணுகு முறையையே சந்திரிகாவும் மாமன் அனுருத்தவும் தேர்ந்து எடுத்துள்ளதில் ஆச்சரியமில்லை!

### ஆட்டம் காணும் ஆபத்து

இதற்கிடையில்—

புலிகளுடனான பேச்சு வார்த்தையை மறந்து அவர்களை ஓரங்கட்டி விட்டு, அவர்களை நசுக்கும் நோக்குடன் போருக்குப் புறப்பட்டு விட்ட சந்திரிகா அரசின் ஆட்சிப் பலம் ஆட்டம்காணும் அறிகுறிகள் பல தெரிகின்றன.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தாமல் வடக்கு-கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்றும் —

தமிழர் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காணாமல் முந்திய அரசைப் போலவே இந்த அரசும் போரை நடத்தினால். —

அரசுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கப் போவதில்லை என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்திருக்கிறது

இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகளை அரசு ஏற்படுத்துமானால் அதன் பின்னர் ஒரு நிமிடமும் அரசில் இணைந்திருக்க போவதில்லை என்று அமைச்சர் அஷ்ரப் எச்சரித்திருக்கிறார்.

போரை நாடும் போக்கையும், போருக்காக அமெரிக்க உதவியைப் பெறுவது குறித்தும் அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

மேற்சொன்ன மூன்று சாராரினதும் ஆதரவு உண்மையாகவே இல்லாமற் போகுமாயின் அரசின் வாக்குப்பலம் குன்றி அது ஆட்டம் காண நேரிடும்.

ஐக்கிய தேசியக்கட்சி தனக்கு இணை எனக் கருதி, தில்லு முல்லுத் தேர்தல் நடத்தியதால் ஒன்பது எம்பிக்களுடன் நாடாளுமன்றம் புகுந்துள்ள ஈ. பி. டி. பியே அரசுக்கு முட்டுக்கொடுக்கும் நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதில்லை.

எதிரி வளர்த்த 'பிள்ளை' சந்திரிகாவுக்குத் தோள் கொடுத்துத் தோழியாகும் நிலையும் வரக்கூடும்! அரசியலில் எதுவும் நடக்கலாம்...! யாரறிவார்...!

★

— உதயகாந்தன் —

## சமாதான முயற்சி சாத்தியமில்லை; கனடா, ஆஸ்திரேலியா ஏமாற்றம்!

## அரசு ஆட்டம் காணும் நெருக்கடி; ஈ. பி. டி. பி. தோள் கொடுக்குமா?

# ஆதாயம் தேடும் இந்திய...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருக்க—

சுமார் 10 ஆயிரம் காஷ்மீர் மக்கள் திரண்டு இந்திய அரசாங்கத்தை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தி உள்ளனர்.

"காஷ்மீருக்கு சுதந்திரம் வேண்டும்", "பாகிஸ்தானுக்கு வெற்றி" போன்ற பல கோஷங்களை பேரணியில் கலந்து கொண்டவர்கள் உணர்ச்சி பொங்க உரக்க ஒலித்தனர்.

இதில் காஷ்மீரில் உள்ள சுமார் 30 அரசியல் மற்றும் மதக்குழுக்கள் கலந்து கொண்டன.

"இந்தியப் படைகள் காஷ்மீர் முழுவதற்கும் தீவைத்தாலும் கூட எமது சுதந்திரப் போராட்டத்தை நாங்கள் கைவிட மாட்டோம் என்று, இந்த ஊர்வலத்திற்கான ஏற்பாடுகளை செய்திருந்த 'குஷியத்' அமைப்பின் தலைவர், அப்துல் கனிவேணி தெரிவித்தார்.

அதே போன்று பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது இந்திய தேசியக் கொடிகள் எரிக்கப்பட்டன; எரியூட்டப்பட்ட இந்திய கொடி ஒன்று இந்திய வெளியுறவு காரியாலயத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் மீது வீசப்பட்டது.

இந்த எரிப்பு நடவடிக்கையின் போது, இந்திய அரசியல் யாப்பின் நகல் ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டது.

இவ்வாறு மாறி மாறி தமது செயலை மற்றவர் தலைமீது கட்டி அடித்து இந்தியாவும், பாகிஸ்தானும் [illegible] றாலும், ஒன்றின் பாச்சா மற்றையதிடம் பலிப்பதாக தெரியவில்லை.

ஆட்டக் களத்தில் பந்தை சிறந்த வீரர்கள் எவ்வாறு மிக லாவகமாக தடுத்து தமது ஓட்டங்களை அதிகரிக்கின்றனரோ அதைவிட மிகவும் முனைப்புடன், எதிராளியின் சிறு பிறழ்வையும் அவரை அதள பாதாளத்தில் ஆழ்த்தும் படி செய்வதில் இந்த இரு நாடுகளும் திறம்பட செயற்படுகின்றன.

இதனால் உண்மையில் நடந்தது என்ன என்ற கேள்விக்கான விடை சிதம்பர ரகசியமாகவே இருக்கப் போகின்றது.

இந்த இரு நாடுகளின் குடுமிச் சண்டையில் அகப்பட்டு [illegible] மக்கள் [illegible] ர்.

★

உலகின் மிகப் புராதன விலங்கான

# டைனோஸரின் முட்டை சீனாவில் கண்டுபிடிப்பு

பீஜிங், ஜூன் 4

சீனாவின் மாகாணம் ஒன்றில் "டைனோஸர்" என்ற புராதன மிருகத்தின் முட்டையின் பகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

50 லட்சம் ஆண்டுகள் முதல் ஒரு கோடி ஆண்டுகள் வரையான மிகப் புராதன காலப் பகுதியைச் சேர்ந்த "டைனோஸர்" விலங்கின் முட்டைகளின் பகுதிகளாக இவை இருக்கலாம் என்று அகழ்வாராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்டுள்ள "டைனோஸர்" முட்டையின் பெரும் பகுதிகள் நல்ல நிலையில் உள்ளன.

உயிரியல் அடிப்படையிலான மாற்றங்கள் மற்றும் 'டைனோஸர்' என்ற பாரிய மிருகத்தின் மறைவு என்பன தொடர்பான ஆராய்ச்சியில் தற்போது கண்டு பிடிக்கப்பட்ட முட்டையின் பகுதிகள் பேருதவியாக இருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. (ஐ)

## சேதமடைந்த கோபுரம் திருத்த 1 மாதம் செல்லும்

கொழும்பு, ஜூன், 4

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை விடுதலைப் புலிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட தொலைத்தொடர்பு கோபுரம் திருத்த ஒருமாத காலம் செல்லும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பாடசாலைகளில்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் செல்வி பொ. கந்தசாமி தலைமையில் நடைபெறும். பிரதம அதிதியாக வைத்தியகலாநிதி டி. டபிள்யூ. ஜெயகுலராஜா கலந்து கொள்வார். (ஓ-14-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாழ். பல்கலைக்கழக,
## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர்களால்
பழைய மாணவ சங்க ஆதரவில்
"ஜெய்சங்கரின்"
## "தீ சுமந்தோர்"
(நாடகம்)

திகதி: 04-06-1995 (ஞாயிறு) காலை 9-30
இன்று மாலை 3-30

இடம்: குமாரசுவாமி மண்டபம்,
யாழ். இந்துக் கல்லூரி
நிக்கற்றுகன் மண்டபவாயிலில்

(36930)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்
## நன்றி நவிலலும்



மலர்வு: 19 — 06 — 1924
உதிர்வு: 06 — 05 — 1995

### அமரர் அழகரத்தினம் ஜெகநாதன்
(முன்னாள் ஓய்வுபெற்ற எயர் சிலோன்-எயர் லங்கா பொறியியலாளர்)

நாளை (05-06-95) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன். அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பத்மாவதி ஜெகநாதன்
(மனைவி)

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.
[36927]

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா ஆனந்தர்
(சங்கானை)

சங்கானை பிளாக் வீதியில் வசித்த கந்தையா ஆனந்தர் 03-06-95 இல் சிவபதமடைந்துவிட்டார்.

இவர் ஓய்வுபெற்ற விவசாய இலாகா ஊழியரும் காலஞ்சென்ற திருமதி நீலாயதாட்சியின் அன்புக் கணவரும், கோபாலகிருஷ்ணன், சத்தியவதி, திலகவதி (இரத்த வங்கி, யாழ் போதனா வைத்தியசாலை) நாகலட்சுமி, விக்கினேஸ்வரன் (கனடா), ஞானேஸ்வரி, குமுதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கதிரவேல், நாகேஸ்வரி, அருளானந்தன், பாலசிங்கம் (ஜேர்மனி), லக்ஷ்மி (கனடா), சபாநாயகம் (லிறின் எஸ்டேட், கற்றன்), மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சாந்தினி (ஜேர்மனி), ஜெயந்தினி, சாந்தகுமார் (ஜேர்மனி), தயானி (கனடா), கஜேந்திரன் (ஜேர்மனி), மயூரன், அனோஜா, சஜனுதன், நிலானி, நிருபன், பிரதிபா (கனடா), பவானந்தி (கனடா), பிரசாந், பிரேமிகா, பிருந்தா ஆகியோரின் அன்புப் பேரனும், ஜனார்த்தனின் (ஜேர்மனி) அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (04-06-95) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கோபாலகிருஷ்ணன்
(மகன்)

பிளாக் வீதி,
சங்கானை.
(36926)

### பாலு பொன்னையா

தென்மட்டுவிலைச் சேர்ந்த பாலு பொன்னையா நேற்று (03-06-95) சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி, மற்றும் தங்கராஜா (லண்டன்), பாலசிங்கம் (லண்டன்), பத்மநாதன் (லண்டன்), கனகாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவகுரு, மற்றும் விமலா (லண்டன்), லீலா, பாக்கியலட்சுமி (லண்டன்), பத்மநாதன் [இளைப்பாறிய ஆசிரியர்] ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற கந்தையா, சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்பிரமணியம் (லண்டன்), தனபாலசிங்கம் (லண்டன்), பிரபாகரன் [லண்டன்], சசிரேக்கா (லண்டன்), மயூரன், தர்சனிகா, பூரணி, கோகுலதாஸ், குமுதினி (லண்டன்), பிரகாஸ், பிரமிளா, மதுரா, மித்திரா, நிருஸா, ரேணுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (4-6-95) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பத்மநாதன்
(மருமகன்)

தென்மட்டுவில்,
சாவகச்சேரி.
(36929)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04 06 1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

## சூழல் தின நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

உலக சூழல் தினத்தை ஒட்டிய சிறப்பு கருத்தரங்கம் ஒன்றினை யாழ். பல்கலைக்கழக சமூகவியல் சமூகம் ஒழுங்கு செய்துள்ளது. உலக சூழல் தினமான நாளை திங்கள் மாலை 4 மணிக்கு, பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில், "சூழலியல் சார்ந்த சமூக விழிப்புணர்வு" என்ற பொருளில் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் சிறப்புரை ஆற்றுவார். [ஒ]

★ ★ ★

யாழ். மாநகராட்சி மன்றம் ஒழுங்கு செய்துள்ள அனைத்துலக சூழல் தின விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

மாநகர சபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரனின் சிறப்புரை இடம்பெறும். இறுதியில் கலை நிகழ்வுகளும் நடைபெறும். [ஒ-14]

★ ★ ★

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம் மருதனார்மடம் கோட்டக் கல்வி அலுவலகம் என்பன இணைந்து நடத்தும் சர்வதேச சூழல் பாதுகாப்பு தின விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

வலி. தெற்கு. உடுவில் பிரதேச செயலாளர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கருத்துரைகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (ஒ-14)

★ ★ ★

வலி. மேற்கு பிரதேச செயலகம், யாழ். மேற்கு போரூட் நிறுவனம் என்பன இணைந்து நடத்தும் சர்வதேச சூழல் பேண் தினமும் வீட்டுத்தோட்ட வேளாண்மைப் போட்டி — பரிசளிப்பு விழாவும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்

பிரதேச செயலாளர் திரு. கா. சந்திரராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உதவிப் பணிப்பாளர் திரு. பொ. கந்தன் கலந்து கொள்வார். [ஒ-14]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 4

உலக சூழல் தினத்தை ஒட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஒழுங்கு செய்துள்ள கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சூழல் தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பரிசில் வழங்கலும் பட்டி மண்டபமும் இடம்பெறும். (ஒ-14)

★ ★ ★

தென்மராட்சி ஜூன் 4

சூழல்பாதுகாப்பு தினத்தை ஒட்டி பளைப் பிரதேச செயலகத்தினர் இப்பிரதேசத்தில் உள்ள அரச, உள்ளூராட்சி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பளை வைத்தியசாலையில் சிரமதானப் பணியினை நாளை திங்கட்கிழமை மேற்கொள்ளவுள்ளனர். (ஜ-117)

## மீண்டும் பூகம்பம்

மொஸ்கோ, ஜூன் 4

கடந்த மாதம் 28 ஆம் திகதி - சரியாக ஏழு நாட்களுக்கு முன்னர் — பூகம்பம் நிகழ்ந்த ரஷ்யாவின் சகாலின் தீவில் நேற்று மீண்டும் பூகம்பம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நேற்றைய பூகம்பத்தில் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

கட்டடங்கள் அதிர்ந்தனவே அன்றி சேதம் எதுவும் ஏற்படவில்லை. [அ]

## விளையாட்டு நிகழ்வுகள்

சாவகச்சேரி மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் கால் இறுதி ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 3.00 மணி:- மயிலங்காடு ஞானமுருகன் "ஏ" அணி எதிர் புத்தூர் விக்னேஸ்வரா "ஏ" அணி.

★ 4 00 மணி:- புங்குடுதீவு அம்பாள் வி. க. அணி எதிர் அல்வாய் நண்பர் வி. க. அணி. [உ-117]

★ ★ ★

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் டொனால்ட் கணேஷகுமார் ஞாபகார்த்த கிண்ணத்திற்காக நடத்தும் 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று காலை 9 மணி முதல் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் நீல அணியை எதிர்த்து மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணி மோதும்.

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் "உதயன்" கிண்ணத்துக்காக ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் பருத்தித்துறை திக்க முனையில் உள்ள கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3 45 மணி:- யங் றோயல் "ஏ" அணி எதிர் ஆதிசக்தி "பி" அணி

★ 4.45 மணி:- யங் றோயல் 'பி' அணி எதிர் கலட்டி ஐ. வி. க. அணி.

★ ★ ★

யாழ். கல்வி வலயம் 1 க்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் நாளை காலை 8.30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்என உடற்கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ரி. அருணகிரிராஜா அறிவித்துள்ளார். [உ]

### காலிநகரில் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பேரைக் கொண்ட காடையர் கூட்டம் நகரில் கூடியதாகவும் —

நேற்றிரவு 10 மணியளவில் அக்கூட்டம் தமிழர்களின் கடைகளைச் சூறையாடி அவற்றைத் தீயிட்டுக்கொளுத்தியதாகவும்—

தமிழருக்குச் சொந்தமான எரிபொருள் நிலையம் ஒன்றும் தாக்கப்பட்டதாகவும்—

செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

காடையர் கூட்டத்தைக் கலைப்பதற்காக பொலீஸார் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும்—

கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடிக்க வைத்ததாகவும் —

ஸ்ரீலங்கா அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அச்சம்பவங்களை பார்த்துக் கொண்டு பொலீஸார் நடவடிக்கை ஏதும் எடுக்காமல் இருந்ததாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இனவன்செயல்கள் வெடித்ததை அடுத்து, காலிப்பகுதிக்கு மேலதிக இராணுவ கடற்படைத் துருப்புகள் அனுப்பி வைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டமும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

காலிப் பகுதி நிலைவரம் தொடர்பாக தென்மாகாண ஆளுநர் கலாநிதி நெவில் கனகரத்தினா தலைமையில் அவசர கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

இதன் பின் —

பாதுகாப்பு நடவடிக்கைக்கென நடமாடும் பொலீஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

காலி மாவட்டம் கடுவலை பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் —

பிரதான வீதி, கம்தெர பிரதேசத்தில் கடற்படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஊரடங்கு அமுலுக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

[உ-ஐ-4-5-6]

### இராணுவம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இவ்விடயத்தில் இந்தியாவும் இலங்கையும் நெருக்கமாகச் செயற்பட ஆரம்பிப்பின், எல்லைப் புறக் கிராமங்கள் மீதான தாக்குதல்களை புலிகள் மேலும் தீவிரப்படுத்துவதற்கு பெருவாய்ப் புண்டு; அடுத்த சில நாட்களில் நிலைமை தெளிவாகத் தெரியக் கூடும்.

இலங்கைப் பிரச்சினையில் தலையிடுவது இல்லை என இந்தியா முன்னர் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது.

ஆனால் —

தற்போது உள்நாட்டுப் பிரச்சினையில் சிக்கி, அரசியல் நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரதமர் நரசிம்மராவ், தமக்கு மிக அவசியமான சோனியா காந்தியின் ஆதரவைப் பெறுவதற்காக— சோனியா காந்தியைத் திருப்திப்படுத்துவதற்காக —புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முயற்சிக்கக் கூடும்; முடிவு செய்யக் கூடும்.

இதன் மூலம், சோனியாவின் ஆதரவைப் பெற்று தமது அரசியல் செல்வாக்கை பிரதமர் ராவ் உறுதிப்படுத்தக் கூடும்.

எனவே மீண்டும் இலங்கைக்கு இந்தியப்படை அனுப்பப்பட்டால் அது இந்தியப் பிரதமரின் அரசியல் வலுப்பாட்டிற்கான நடவடிக்கையாகவே இருக்கும்; இலங்கை இனப்பிரச்சினைக்கு உதவும் நடவடிக்கையாக இருக்க மாட்டாது. — என்றார் (உ-)

### 12 வேங்கைகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்ப்பாணம்)

★ வீரவேங்கை காங்கேயன் (சிங்கராசா சஜமுகன்— யாழ்ப்பாணம்)

★ வீரவேங்கை கம்பன் (இராசநாயகம் பிரான்ஸிஸ்— யாழ்ப்பாணம்)

★ வீரவேங்கை செந்தமிழன் (சபாபதி உதயகரன் யாழ்ப்பாணம்)

★ வீரவேங்கை அச்சுதன் (சந்திரமோகன் சத்தியடவான் — முள்ளியவளை)

(ஐ)

### பூநகரியி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ ஆதற்குரிய மகஸின் — 04

★ நடுத்தர ரவை — 410

★ எம். 75 கிரனேட் — 02

★ மகஸின் ஹோல்ஸர் — 01

★ மழைக் கவசம் — 01

ஆகியவற்றை புலிகள் கைப்பற்றினர் (ஐ-4)

### பிரபா,...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளது இதுவே முதல் தடவையாகும்.

இந்திய இலங்கை சட்டங்களை நன்கு ஆராய்ந்த பின்னர் பிரபாகரனை நாடு கடத்தும்படி இலங்கையிடம் கோருவது என அரசு முடிவு செய்தது என்றும் —

சட்டப் பிரச்சினையை இந்தியா கவனமாக பரிசீலனை செய்தது என்றும்

அமைச்சர் ப. சிதம்பரம் மேலும் தெரிவித்தார்.

(உ-ஜ-4-6)

### மற்றொரு ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டுள்ளது. இதற்கு நாட்டு மக்கள் ஒன்றுபட்டு ஆதரவு வழங்கவேண்டும்.

பிரிவினைவாத பயங்கரவாதிகளின் குறிக்கோள்களை ஊக்குவிக்கும் நோக்கமுடைய சீர்குலைவுச் செயல்களைக் கட்டுப்படுத்தக்கூடும் நடவடிக்கை எடுக்குமாறு அரசு பொலீஸாருக்கும் இராணுவத்தினருக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் பணித்துள்ளது.

—இவ்வாறு ஜனாதிபதி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். —

ஜனாதிபதி இந்த அறிக்கையில் பெயர் குறிப்பிடாமல் ஐக்கிய தேசியக் கட்சியையே நேரடியாகச் சாடியுள்ளார் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. [ஐ]

தீயை எறிபவன்
கைகவன் என்றால்
திசையைக்காட்டி விடுபவன்
உளவாளி!
உடலுக்குள் நோயென்று
ஒளிக்காதீர்
... மாறாது!

## புலிகள் தாக்கலாம் என்ற பீதியால் ஷெல் வீச்சு

மட்டக்களப்பு, ஜூன் 4

விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தினால், விடுதலைப்புலிகளை அருகில் வராது தடுக்கும் நோக்குடன், மட்டக்களப்பு காட்டு எல்லைப்புறக் கிராம முகாம்களில் உள்ள இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த திங்களன்று இம்முகாம் ஒன்றிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று புலிபாய்ந்தகல் பகுதியில் வீழ்ந்து வெடித்ததால், வயோதிபர் ஒருவரும், அவரது பேரனும் காயங்களுக்கு உள்ளாகினர்.

அதேதினம் கிரான் பகுதிப் பொதுமக்களை, இராணுவத்தினர் மிகமோசமாகத் தாக்கினர். [ஒ-5]

## தாண்டிக்குளத்தில் புதிய நடைமுறை
## பிள்ளைகளும்பெற்றோரும் படம் எடுக்கப்படுகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 4

வட பகுதியிலிருந்து தாண்டிக்குளம் ஊடாக பிள்ளைகளைக் கூட்டிச் செல்லும் பெற்றோர்களும் பாதுகாவலர்களும் கூட இப்போது படம் எடுக்கப்படுகின்றனர்.

அழைத்துச் செல்லும் பிள்ளைகளின் விவரங்களுடன் அவர்களின் விவரங்களும் பதிவு செய்யப்பட்டு —

பிள்ளைகளுக்கு கொடுக்கப்படும் இலக்கங்களுடன் தொடர்புடைய இலக்கங்கள் அவர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

பின்னர் பிள்ளைகளுடன் நிற்க வைத்து ஒன்றாக படம் எடுக்கப்படுகிறது.

முன்னர் பிள்ளைகளை மட்டும் நிறுத்தி வைத்துக் கொண்டு பெற்றோரை, பாதுகாவலர்களை பிறவுண் கம்பனியில் சென்று நிற்கும்படி இராணுவம் பணித்து வந்தது தெரிந்ததே. (ஒ-14)

## போர் முனைக்குச்செல்ல தயாராகும் சிங்கள எம். பி.

மாத்தறை, ஜூன் 4

புலிகளுக்கு எதிரான வடக்கு போர் முனைக்குச் சென்று போராடத்தான் தயாராக உள்ளதாக அம்பாந்தோட்டை மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி எம்பி. மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

ஐ தே. க தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஊடாகதனது இந்த வேண்டுகோளை ஜனாதிபதிக்குச் சமர்ப்பிப்பதாக அவர் கூறினார்.

எம். பி. பதவியை பாதுகாப்பதைவிட நாட்டைக் காப்பதற்காக யுத்த முனைக்கு சென்று உயிர்துறப்பதும்—

போதி பூஜை மலர்பூஜை செய்வதைவிட உயிர்த் தியாகம் செய்வதும் எவ்வளவோ மேலானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-14)

## 4-6-95 இன்றும் [ஞாயிறு] நடைபெறுகிறது

### திருமறைக் கலாமன்றம்
வழங்கும்
## "7 பிள்ளை நல்லதங்காள்"
(இறுதிக் காட்சி)

இடம்: மன்ற அரங்கு
நேரம்: மாலை 7-00 மணி

(சி-1656)

## மரண அறிவித்தல்

### சபாபதி உதயகரன்

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான சபாபதி உதயகரன் அவர்கள் [2-6-95] இல் அகாலமரணமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான புகையிரத நிலைய அதிபர் சபாபதி - மங்கையர்க்கரசி தம்பதியினரின் அன்புப்புதல்வனும், திருமதி ம. சுதாராகினி, நாகேந்திரகுமார் [பிரான்ஸ்], சுதாஸ்கரன் [பிரான்ஸ்], சிவரஞ்சினி [மலேசியா], ஜெயராஜினி (கொழும்பு), இராஜகரன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புச் சகோதரனும், கி. மகாலிங்கம் [கிராம அலுவலர்], லலிதா, ரவீந்திரன் [பொறியியலாளர், மலேசியா], பிறேம் ராஜ் (பொறியியலாளர், அபுதாபி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
கி. மகாலிங்கம்
[மைத்துனர் - கிராம அலுவலர்]

224, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[36931]

## OBITUARY

### ALLEN CHELLIAH NALLAIYAH

Mr. A. C. Nallaiyah, Retired Chief Station-master, beloved husband of the Margaret Paripooranam, beloved father of Punitham, the late Punitharajah, Karuna, Thilakam, Nalayini and Vasuky; Beloved father-in-law of Nesadurai, Gnanam, the late James Thampoe, Abeyasekera and Hitchcock; beloved Grandfather of Dimple, Mervyn, Enoch, Hannah, Nirupan, Senan, Nimmah, Jeba, Julian, Noeline and Salome, entered Glory.

The Funeral Service will be held at his residence No. 73, Rakka Road, Jaffna, at 3-00 p.m. on Sunday June 4th 1995. The cortege will leave at 4.00 p.m. for interment at the Pentecostal Burial Grounds, Koddady.

Mrs. D. K. Thampoe,
Daughter.

73, Rakka Road,
Jaffna.
[36919]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org